St. David's High School,

(FORMERLY S. P. G. HIGH SCHOOL)

Founded 1717.

MAGAZINE

CUDDALORE O. T.

PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS



MARCH 1952

ADVERTISEMENTS

Our Magazine will be published in March every year. We invite Commercial agencies, traders and artisans to advertise in our Magazine which has a wide circulation. The rates of advertisements are given below:-

The material for advertisement may be sent to the Business Manager, Magazine Committee.

ADVERTISEMENT RATES

Outer Cover Full page (4th page)			Rs.	15	0	0
"	½	" "		8	0	0
Inside Cover Full page (2nd page)				12	0	0
"	½	" "		7	0	0
"	Full page (3rd page)			10	0	0
"	½	" "		6	0	0
Inside pages Full page				8	0	0
"	½	"		5	0	0

We request the readers of this magazine to extend their patronage to the advertisers. Hope you will all encourage them by purchasing their goods yourselves. We also thank the advertisers for using our magazine as a medium of advertisement. We whole-heartedly thank the masters and students who have helped us in securing Advertisements.

All the blocks (excepting those of the advertisements) in this issue were made by Messrs. M. C. Appasamy Chetty & Co, Tri-Colour, Half-tone and Line block makers, 14, Jone's Street, Mannady, Madras. Our thanks are due to them. They were prompt in the despatch of the blocks.

Business Manager,

Magazine Committee.

Contents.

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUL 1955
MADRAS

		Page
1.	Ourselves	3
2.	School Report	4
3.	The Ghost —(Story)	6
4.	Our Sexton	7
5.	Good Manners	8
6.	Alphabetical Selections	8
7.	You should know	9
8.	Leaves from the Log Book ...	10
9.	Conundrums	12
10.	Forward Let us try to go ...	13
11.	வாழ்க கலைக்கோயில்	14
12.	வினாவும் விடையும்	15
13.	கனம் P. S. மாசிலாமணி ஐயர் ...	17
14.	அன்றாட வாழ்விலே	19
15.	காற்றைக் கண்ணால் காண முடியுமா	22
16.	பொய்க்கனா	24
17.	தமிழின் உயர்வும் அதனைப்போற்றும் நெறியும்	29
18.	எங்கள் பள்ளியில் குடிமைப் பயிற்சி	32
19.	கல்வியும் கைத்தொழிலும் ...	34
20.	Answer to Conundrums ...	35
21.	எது உண்மை	36
22.	எதிர்பாராத உதவி	39
23.	எனது ஆசைப் பெரியார்	43
24.	மனிதன் யார்	45
25.	விகடங்கள்	46
26.	An Appeal	47
27.	தமிழ் இலக்கிய மன்றம்	48
28.	வீரச்சுவை	50
29.	தேகப் பயிற்சி	52
30.	பேரறிஞர்கள்	55
31.	எங்கள் ஊர்	58
32.	திருத்துங்கள்	64
33.	Physical Education	67

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS

St. David's High School,

CUDDALORE O. T.

School Staff 1951 - 52

Sri G. M. Arumainayagam, B. A., L. T.,
Headmaster & Correspondent.

1. „ G. H. Clarence, B. A., L. T., *Mathematics.*
2. „ S. Muthukrishnan, B. A., L. T., *History.*
3. „ T. Thirunavukarasu, B. A., L. T., *History.*
4. „ A. Subramanian, B. A.,
5. „ A. Murugaian, B. A.,
6. „ M. Rajaram, B. Sc.,
7. „ H. V. Krishnamurthi Rao, *(Senior Clerk)*
8. „ K. Venugopal
9. „ K. Soundararajan
10. „ T. Dhanaraj, *Citizenship-trained.*
11. „ V. Gnanamani
12. Srimathi L. R. Gnanamani
13. Sri V. R. Thambiraj
14. „ N. J. Gnanaiah, (*Manual Training Instructor.*)
15. „ S. Duraisami
16. „ C. Ramalingam
17. „ K. Jayaraman
18. Srimathi T. Yesudian
19. „ B. Rajendram
20. Sri R. Palaniyandi Mudaliar (*Vidwan*)
21. „ N. Thandapani „
22. „ K. Sambandam „

23. ,, A. Kareem, (*Hindi Pandit*)
24. ,, G. Gopalan (*Art Master*)
25. ,, D. Eddy Gnanamuthu, (P. E. T.)
26. ,, T. Rathinasamy, (P. E. T.)
27. ,, R. Kuppusamy (*Asst. P. E. T.*)
28. ,, C. Rathinasamy, (*Junior Clerk*)

Editorial Board

1. Sri G. M. Arumainayagam, B. A., L. T., *President.*
2. ,, G. H. Clarence, B. A., L. T., *Editor.*
3. ,, S. Muthukrishnan, B. A., L. T.,
4. ,, A. Murugaian, B. A.,
5. ,, T. Dhanaraj
6 ,, K. Sambandam
7. ,, G. Gopalan.

Staff Council

1. Sri G. M. Arumainayagam, B. A., L. T.,
2. ,, G. H. Clarence, B. A., L. T.,
3. ,, K. Soundararajan
4. ,, C. Ramalingam
5. ,, D. Eddy Gnanamuthu.

Sports Committee

1. Sri G. M. Arumainayagam, B. A., L. T., *President.*
2. ,, D. Eddy Gnanamuthu, (*Secretary*)
3. ,, G. H. Clarence
4. ,, T. Dhanaraj
5. ,, N. J. Gnanaiah

Students: 1. T. Kanthappan, 2. K. Ramadoss.

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS

Ourselves.

This year witnesses the birth of our school, annual. Since this Institution became a full-fledged High School, the members of the staff desired to bring out an Annual as it is the best link between the old and the new boys. We thank God for enabling us to bring this out. This is purely a student's Venture with a full account of the activities of the school during the current academic year.

For many decades our school was familiar to all as the S. P. G. High School. This year onwards it begins to scatter light under the name of St. David's High School. There is progress in several directions. Pucca masonry structures have replaced thatched buildings. The physical education section is in charge of a Chief Instructor assisted by two qualified instructors. The boys are not only trained as good sportsmen, but also as good citizens which is the present need of our mother—land.

We thank God for helping us to make others see us and we hope through His ever present guidance we will present in the succeeding years a richer account of Ourselves.

School Report.

It is appropriate that this report, the first to appear in the school magazine, should begin with an explanation why the name of the school has been changed into St. David's High School. After the union of some of the Churches of South India and the birth of Church of South India it was meaningless to continue to have the name as S. P. G. High School. The school committee thought that an institution like this which was founded in the year 1717 should be associated with an ancient structure as the Fort St. David and so it was decided that the name should be changed into St. David's High School.

Strength:

The strength of the school continues to rise though we regret to say there is no substantial improvement in accommodation. Neither the State nor the Mission can find the money to raise new buildings and it is for the generous minded public in and around the town to come forward with their help. The average number of pupils on the rolls during the year is 768 out of which the girls number 110. It is a pity that girls cannot be admitted in the higher forms because of the lack of suitable accommodation.

Results.

Thirty-nine pupils were sent up for the S. S. L. C. examination in March '51 and twenty three were declared eligible. The school averages were above the



S. S. L. C. (1951-'52)



STAFF (1951–'52)

UBLIC LIBRARY

presidency in all subjects except one and we hope the results will improve this year. Three of the eligibles scored above 70%.

Staff.

There are 28 members on our Staff and three of them are ladies, who are mostly in charge of sections where there is a majority of girls. Sri P. Ponnusamy, our junior clerk, had to leave us at the beginning of the year to better his prospects. Sri T. Rathinasamy, an old boy of this school returned to us as a Physical Education Teacher after undergoing training at the Y. M. C. A. College, Saidapet. We are happy to say that there are three P. E. T's on our Staff which goes to show that Physical education receives its due share of attention in this infant high school. Is it any wonder then that though it has not been our lot to win cups and trophies in the Inter Schools competitions, yet the health of the majority of our pupils is, in the words of the school doctor, good? Intra mural competitions and Annual Athletic sports are held regularly and a record of the physical education activities appears elsewere.

We are grateful to God for the work that has been done this year and we pray that this school may continue to be a blessing to the people in this town.

SHORT STORY :

The ghost! The ghost!!

ONCE there lived a scientist named Sankar. To do his work quietly, he went to a village and there hired a lonely house known among the villages as the haunted house. He used to spend most of his time in study. His table was in front like a Chest of drawers. It had four drawers and Mr. Sankar kept his books in them. The drawers were so long that they covered half the breadth of table. The back half was open just like a table.

Mr. Sankar had a servant who had a mischievous son named Rama. When Sankar used to spend more time in his research work and reading, his meals were taken to his study room. One evening when the master was busy reading, he ordered his servant to bring him his tiffin. The servant did so.

After half-an hour, Mr. Sankar put down his book and pulled the plate towards him. To his surprise he found that it was empty. In his surprise he cried out, " The ghost! The ghost !!. He remembered the stories told about the ghost in that house. Though he was a man of strong will, the empty plate in front gave him the fear of the ghost. He wanted to find it out. Just then his friend, a Police Inspector came in. He told him the story and both began the research. They searched the nooks and corners of the room.

The keen eyes of the Inspector saw the table Cloth move. He rushed to the table and bent down to look into it. The chest knocked his head. Then he went to

the opposite side and went in. From there, he came out as a victorious soldier with the ghost. The scientist rushed to the spot to see the ghost. There he saw the Inspector boxing the ear of Rama, the son of his servant.

The mischievous lad then said crying that he was hungry and at the same time wanted to play a joke. Both the friends had a hearty laugh over the matter and told their other friends the story of the ghost. The scientist lived there long with no fear of the ghost but at times Rama used to play the part of the ghost.

C. V. JAYARAMAN
V. A.

Our Sexton.

There dwells a Sexton hale and bold
Beside our school latrine,
He works and walks though he is old
And keeps church compound clean.
And this the burden of his curse,
For many a curse has he,
" Though old I work, my young daughter,
She never works for me"

His daughter bows down and she cries
" O, please, please excuse me ;
For could my work be light as thine
I'd gladly work for thee :
See what your son-in-law gave me,
Blessed big daughter one,
Thank God there is no more to be
O, could I work for thee ?"

[By T. D.]

Good Manners.

Always say, "*Please*" when asking for anything
Say, "*Thank you*" on receiving a kindness.
Say, "*I Beg your Pardon*" or "*Excuse me*" when doing anything to hurt another, when interrupting another speaking and when contradicting another.
Never say "I want" to a superior; but "Please, may I have"
Never snatch anything from another,
Put your hand before your mouth when yawning.
Never omit "Mr." before a superior's name.
Be neat in appearance,
Salute masters when you meet them in the streets,
Stand straight; do not slouch.
Never say, "allright" to a superior but "Very well, Sir"
Do not crow, when you win, and do not cry when you lose.

Alphabetical Selections.

All work and no play makes Jack a dull boy; all play and no work makes Jack a mere toy.
Be slow to promise but quick to perform
Count not your Chickens before they are hatched.
Do not rip up old sores.
Example is better than precept.
Flatter no one and let no one flatter you.
Give everyman thine ear, but few thy tongue.
Haste makes waste, and waste makes want.
If at first you don't succeed, try, try, try again.
Join hands only with the virtuous.
Keep your mind from evil thoughts.
Look before you leap.

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS



SCHOOL CABINET (1951–'52)

PRACTISING FIRST AID

PUBLIC LIBRARY
JUN 1955
DRAS

CITIZENSHIP - BOYS
PREPARING THEIR OWN MEAL

Make hay while the sun shines.
New brooms sweep clean.
One man's meat is another man's poison.
Practice makes perfect.
Question not the veracity of a friend.
Rome was not built in a day.
Speech is silver, silence is gold.
Those who live in glass houses should not throw stones at others.
Use your leisure time for improvement,
Venture not upon the threshold of wrong.
What's sauce for the goose is sauce for the gander.
'Xtend to everyone a kindly salutation.
Yield not to temptation.
Zealously labour for the right and success is certain.

You should know.

A DAY OF YOUR LIFE

By S. B. Whitehead

If you are an adult about 12 stones, in 24 hrs.

Your heart beats	103, 680 times
Your blood travels	168,000,000 miles
You breathe	23,040 times
You inhale	438 c. ft. of air
You eat	3¼ ℔ of food
You drink	2·9 pints liquid
You lost in weight	7·8 ℔ of waste
You perspire	1·43 pints
You give off in heat	85·6° F.
You generate in energy	450 foot ton
You turn in sleep	25-35 times
You speak	4,800 words
You move	750 Major muscles
Your nails grow	·000046″
Your hair grows	·01714″
You exercise	7,000,000 brain cells.

M. HARRIRAM, (VI A.)

Leaves from the Log Book.

24th Aug. '51.

A memorable day for this year. His Lordship the Bishop in Madras, Most Rev. A. Hollis, M. A., and his wife paid a visit. The Headmaster introduced to them all the members of the staff. They were pleased to have breakfast with the members of the staff. His lordship was pleased to be present at assembly prayer. He blessed the pupils and advised them to prepare themselves to be good and useful citizens. Sri. S. Muthukrishna Iyer, on behalf of the members of the staff and students thanked his lordship for his words of advice.

24th October '51.

The United Nations' Day was observed. Sri. S. Muthukrishnan explained to the students the significance of that day detailing at length the history of that organisation and the service it does to humanity.

3rd November '51.

The Sixth form pupils went on an excursion to Mettur, Coimbatore and Ooty. They were under the care of Messrs. A. Murugaiyan, Dandapani and T. Rathinaswami.

22nd November '51.

Sri. T. Thirunavukkarasu led the pupils of Form V on an excursion to Madras, Wallajabad, Tirukkalikundram and Mahabalipuram. The management thanks the Proprietor, 'The Hindu' Madras and the Manager, 'The Madras Pencil Factory' for enabling the teacher to show and explain to the pupils their concerns at work. The staff and pupils of the Hindu Religious Endowment school, Wallajabad were at home to the party and entertained them with their music and dancing.

10th and 11th December '51.

The District Educational Officer, South Arcot, Sri S. J. Savarinathan, M. A., Dip. El; T. Dip. (London) M. R. S. E., (England) inspected the school. He was pleased with the work done. He encouraged us with his suggestions as to improve our work further.

2nd and 5th January '52.

The members of the Staff were on election duty as Presiding officers and Assistant Presiding officers. They discharged their duty with zeal thus contributing their might towards this mammoth event unique in the history of democratic countries.

27th to 29th January '52.

The T. B. seals campaign was pushed vigorously.

2nd February '52.

The examination conducted by the Manavar Manram Madras in Tamil for the benefit of the students appearing for the S S. L. C. Public Examination 1952 was held. Most of the VI Form students took part in it and eight of them have since been declared to have passed in the first class.

7th February '52.

The school was closed as a mark of respect for the suddden demise of His Majesty King George VI whose memory is cherished through out the length and breadth of this great land for the part he played in enabling India to attain Independence.

20th February '52.

The annual athletic sports of the school came off in the school grounds. The events composed of 33 items. The physical training instructors took much pains to run

the events orderly and expeditiously. The Headmaster thanked the members of the staff and the volunteers for assisting him and entertained them with tea.

22nd to 24th March '52.

The Headmaster and members of the staff went on an excursion to Salem, Yercaud and Mettur. This brought together all the members of the staff and enabled them to live a community life.

CONUNDRUMS.

1. Why are tall people more lazy than short ones?
2. Why does the collector at the railway station punch a hole in your ticket?
3. Why is a policeman like a rainbow?
4. What key is the hardest to turn?
5. What is it when you knock out one eye, has only the nose left?
6. What beats a good wife?
7. Which travels faster, heat or cold?
8. Which is the cleanest letter in the alphabet?
9. Can February March?
10. How many days belong to a year?

FOR E. S. L. C. & S. S. L. C. EXAMINATIONS
THE LIFCO BOOKS ARE THE BEST
APPLY FOR LIFCO PRICE LIST TO:
THE LITTLE FLOWER CO.,
'Bhurangam Building' : MADRAS-17.

FORWARD LET US TRY TO GO

Tune — ' ஜியா பேகரார் ஹை ' in, Barsaat."
[Composed by — Sri. K. Jayaraman, Assistant]

Forward let us try to go
Always be steady and slow
Till our end let us fight
To achieve our own right.

Fear not pain or poverty
Fear not any earthly thing
The poorest man who does his part
Is himself equal to a king.

Never turn your head at the
Sight of dangers and fears
Try to help the poor and at least
Let your heart shed tears.

Get up from your slumber
And devote in daily duties
Try to learn something good
From all the natural beauties.

உயர்ந்த ரகம்! மலிவான விலை!!

* எங்களிடம் *

வயக்காடு உளுந்து உடைத்த
நெ. 1, வெள்ளை உளுத்தம்
பருப்பு; கோகலா கெட்டி
துவரம் பருப்பு; சேங்கல்
துவரம் பருப்பு; பைத்தம்
பருப்பு விலை சகாயமாகவும்,
நயம் சரக்காகவும் கிடைக்கும்

உரிமை :

V. K. S. வைரவ நாடார்,

32, சோனகர் தெரு : : கடலூர் ஓ. டி.

வாழ்க கலைக்கோயில்.

இன்தமிழ் அகத்து ஏற்புடைச் சான்றோர்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமென்
றறைந்தனர் அதனால் அலர்ந்தன பலப்பல
நிறைந்திடு கலைக்கோ விலெனும் நிலையம்
உறைந்திடு மதுரையில் உற்றசங் கத்துடன்
மறைந்தன சிலதாம் மற்றவை புக்க
மதத்தொடு நின்ற மலைநிகர் கோவில்
பதத்தொடு படர்ந்த மடமெனும் இடத்தை
அடைந்து வாழ்ந்தன அங்கும் இன்னலால்
உடைந்து உள்ளம் உருகி நின்றன
பின்னர் மக்கள் பேதைமை இருளில்
நன்னர் மூழ்கி நலிந்து உலையக்
கண்ட கண்ணுளார் கனிவுளம் எய்தி
இன்னர் சிலச்சில இன்கலைக் கோவில்
என்னும் அரிய எழிலுடை நிலையம்
தன்னை நாட்டினர் தரணியில் அவருள்
துன்னரும் புகழ்கொள் தூய கிறித்தவப்
பெருந்தகை யாளர் பெட்புறப் புரிந்த
அருந்தவத் தொண்டுகள் அனேக மதனுள்
மடமை மாய்த்து மக்கள்தம் அறிவை
திடங்கொளச் செய்யுங் கலைபயில் கோயில்
தன்னுள் ஒன்றாய் தனிப்புகழ் கொள்ள
முன்னூ றாண்டின் முன்னர் நிறுவிய
என்னருந் தாவீது உயர்நிலைப் பள்ளி
பன்னரும் இசைதனைப் பாரினிற் பெறவரு
சீர்கொள் ஆண்டு மலரெனுஞ் செந்நூல்
ஏர்பல பெற்று எழிலுடன் ஓங்கி
வாழ்க என்றே வாழ்த்துவன் யானே.

இங்ஙனம்,
வித்வான். B. தண்டபாணி,
தமிழாசிரியன், புனிதவள-தாவீது
உயர்நிலைப்பள்ளி, கடலூர் O.T.

வினாவும் விடையும்

(கிறிஸ்தவ விவிலிய நூல்)

1. யார் கடவுளுடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

விடை :— கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும் கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.

2. ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங் கலங்கின கண்கள்?

விடை :— மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும் கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. மதுபானம் இரத்த வர்ணமாயிருந்து பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும்போது நீ அதைப் பாராதே, அது மெதுவாய் இறங்கும், முடிவிலே அது பாம்பைப்போலே கடிக்கும். விரியனைப்போல் தீண்டும்.

3. கபட நாவே உனக்கு என்ன கிடைக்கும்?

விடை :— பலவானுடைய கூர்மையான அம்புகளும் சூரைச் செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும்.

4. காரியத்தின் கடைத் தொகை யாது?

விடை :— கடவுளுக்குப் பயந்து அவர் கட்டளைகளைக் கைக்கொள். எல்லா மனிதர்மேலும் விழுந்த கடமை இதுவே.

★

Unequalled in its class

UBEROI

SPORTS SPECIALISTS

22, Mount Road, Madras 2

We have made SPORTS GOODS for 60 years–Millions of pieces in each Section, for use by INDIA'S most exacting players.

Whatever Material, methods or specifications were required in sports goods construction at any particulars time, UBEROI products have always been tops in value and performance.

Backed by this record of successful performance our new post-war GAMES EQUIPMENT is really unequalled in its class.

India's Foremost Sports Goods Makers

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS

Rev. P. S. MASILAMANI, B. A., L. T.,

கனம் P. S. மாசிலாமணி ஐயரவர்கள், B. A., L. T.,

தோற்றம் 1895. *மறைவு* **1949.**

நல்லாரைக் காண்பதுவும் நன்றே — நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே. *மூதுறை.*

இப்பெரியார் 1895-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 28-ம் நாள் திருநெல்லை ஜில்லாவைச் சேர்ந்த கடயம் என்னும் ஊரில் ஒரு உயர் குடும்பத்தைச்சேர்ந்த சப் ரிஜிஸ்திரரரின் மகனாய் அவதரித்தார். உதித்த நாற்பதாம் நாளிலேயே அன்னையார் இவ்வுலகை விட்டுப்பிரிந்தார். அன்னை பிரிந்த ஒரு வாரத்துக்குள் நோய்வாய்ப்பட கடவுள் ஊழியத்துக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டார். தந்தையும் 1904-ஆம் ஆண்டில் பிரிந்து மேலுலகை எய்துவிட தன் சிறிய தந்தையரான, ராவ் சாஹிப் T. R. மாசிலாமணி நாடார் அவரை சென்னை பரி. பவுல் உயர்தர பாடசாலையில் கல்வி பயிலும்படி சேர்த்தார்.

இளம் பருவம்

சென்னை கிறிஸ்துவ கல்லூரியில் B. A. பட்டம் பெற்று தாம் படித்த வெப்பேரி பரி பவுல் உயர்தர பாடசாலையிலேயே 1923-ல் ஆசிரியராக அமர்ந்தார். அச்சமயம் பிரின்ஸிபாலாயிருந்த கனம் G. M. விதர்ஸ் என்னும் ஆங்கிலேய குருவானவர் அவரை கல்கத்தாவுக்கு அனுப்பினர். இரண்டு வருடங்களுக்குப் பின்னர் L. Th என்னும் திருமறை ஓதும் வல்லுநர் பட்டம்பெற்று அதே கலாசாலை ஆலயத்தின் (Chapel) பொறுப்பாளியாகவும் கெரிக்கி (Gericke) என்னும் விடுதிக்கு (hostel) பாதுகாவல (Warden) னாகவும் ஏற்படுத்தப்பட்டார்.

கல்வி & ஊழியம்

1935-ஆம் ஆண்டில் கூடலூர் O. T., S. P. G. நடுத்தர பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும் மறுவருடம் அதன் மானேஜராகவும் நியமிக்கப்பட்டார். பாடசாலை ஊழியம் தவிர, கடலூர் N. T., கடலூர் O. T., பாண்டிச்சேரி, அனுக்கல்பட்டு சபைகளின் குருவாகவும் பணியாற்றினர். நிற்க கூடலூர் O. T. கூட்டுறவுப் பண்டகசாலைத் தலைவராகவும், பெஞ்சு கோர்ட்டின் Honorary Magistrate ஆகவும் வேலை பார்த்துவந்தார்.

அன்னாரின் தெய்வீகப்பற்றினாலும், பக்தி வைராக்கியத்தினாலும் உற்சாகத்துடன் கூடிய உழைப்பினாலும் நம் பாடசாலையில் 1946 ஆம் வருடம் (ஸ்தாபகமாகிய 229

மதிப்புரை

வருடங்கட்குப்பின்) நான்காம் படிவம் நிறுவப்பட்டு 1948 ஆம் ஆண்டில் S. S. L. C. பரீட்சைக்கு முதல் முதலாக மாணவர் அனுப்பப்பட்டு, சுமார் 80% மாணவர்கள் தேர்ச்சிபெற்றனர். தற்போதுள்ள கட்டிடங்கள், மாணவர் தொகை, மற்றும் காரியங்கள் அவர் ஊழியத்தைச் சிறப்பிக்கும் ஞாபகச் சின்னங்கள் எனலாம்.

இப் பெரியார் மாணவர்க்கு எளிதில் விளங்குமாறு செவ்வனே போதிக்கும் திறனுடையவர். மாணவர்மீது வரம்பு கடந்த அன்புகொண்டவர் அவர்களது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சக்தி வாய்ந்தவர். குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செவ்வையாய் முடிக்குந் தன்மையர். எளியவர் செல்வந்தர் என்ற வேறுபாடின்றி அவர்கட்கு உதவி செய்பவர். அவரைக் கிட்டிச் சேர்பவர்க்கு முக்கியமாக எளியவர்க்கு தம்மாலியன்ற உதவி செய்ய முன் வருபவர்.

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன் உடையார் கண்ணே உள"

என்று திருவள்ளுவ நாயனார் புகழும் ஈகைக்குணம் பொருந்தியவர். நோய் வாய்ப்பட்டவர்கள் இல்லங்கட்கு அடிக்கடிச் சென்று அவர்கட்கு உதவி புரிந்து, இன்னுரைகள் பேசி, கடவுளிடம் பிரார்த்தித்து வரும் இயல்புடையவர்.

கடவுள் அவர் ஊழியத்தை ஆசீர்வதித்தார். அவர் தன் மனைவிக்கு உகந்த கணவனாகவும், பிள்ளைகளுக்கு முன் மாதிரியான தந்தையாகவும், சினேகிதர்களுக்கு உரிய

முடிவு

நண்பராகவும் ஜீவித்தார். பள்ளிகூடத்திற்காக மனோ வாக்கு காயம் எல்லாவற்றையும் செலவிட்டு நோய்வாய்ப்பட்டார். இத்தகைய பெரியார் 1949 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் காலை அன்னவரை அறிந்த உலகம் அங்கலாய்க்க, உற்றார், உறவினர் உளம் நோக, மனைவி மக்கள் மனமடிய இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நிழலை எய்தினர்.

T. நனராஜ், ஆசிரியர்.

அன்றாட வாழ்விலே ...

ஜனவரி இருபத்தாறு. நாட்டிலே மக்களின் அரசு மலர்ந்த பெருநாள். அலுவலகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் யாவுக்கும் விடுமுறை. அன்று, யாவர் மனத்திலும் மலர்ச்சி. மாணவர் உள்ளங்களிலோ உவகைக் குதிப்பு. அழகுத் தோரணங்கள், அலங்கார வாகனங்கள், பாட்டிசைக்கும் ரேடியோ, பார்வைப் பறிக்கும் வீரரின் அணிவகுப்பு—எல்லாம் ஆண்டின் அந்த நாளைக் கொண்டாடுகின்றன. நாமும் ஆனந்தமாக பொழுதைப் போக்கி விடுகிறோம். இத்துடன் இவ்விழா முடியவேண்டியதுதானா? அன்றாட வாழ்வில் எத்தனையோ சமயங்களிலே இறைவனது துணை நாடும் நாம், பலகோடி மக்களைப் பெற்றெடுத்த நாட்டின் பெருநாளிலே அவனை எண்ணவேண்டாமா? துணை தேட வேண்டாமா? வாழ்விலே இன்பங்கள் பெற்று மகிழ வேண்டுமென இறைவனிடம் மன்றாடும் நாம், நாடு நலம் பெற்றுச் சிறப்புத்தாங்கி ஒளிவீச வேண்டுமென உள்ளமுருகி வேண்டுகோள் ஒன்றை வெளியிட வேண்டாமா?

"கடவுளுக்கு வேண்டுதலா!" என்று சில நம்பிக்கையற்றவர்கள் நினைக்கலாம். அவர்கள் சிந்திக்கட்டும். அஸ்ஸாம் பூகம்பத்தைத் தடைசெய்ய யாராலும் முடியவில்லை. ஆந்திர வெள்ளத்திற்கு அணைகட்ட எவராலும் இயலவில்லை. தவறிப்போன மழையைத்தருவித்து விளைச்சலைப் பெருக்கியவர் ஒருவருமில்லை. மனிதன் என்னதான் முயன்றாலும் இயற்கையை வென்றுவாகை சூட முடியாது. பூகம்பமும் வெள்ளப்பெருக்கும், மறைந்த மழையும் நம் ஒருவருடைய வாழ்விலே பெருத்த மாறுதலைப் படைக்காது போனாலும் நாட்டின் பொது வாழ்விலே பஞ்சத்தைப் படைத்து விட்டன.

அலங்காரப் பந்தல்; அதன் அழகு வளைப்புகளிலே சிரிக்கின்ற விளக்குகள். வீட்டிற்குள்ளே மகிழ்ச்சி; முறுவல்; ஆனந்த இரைச்சல். இவையாவும் கலியாண வீட்டிலே. அந்தக் கலியாணத்திற்கு நாமுந்தான் போகின்றோம். உபசாரம் பெறுகிறோம்; சுவையான உணவு பெறுகிறோம். வாசனைத்தாம்பூலம் தரிக்கிறோம். சிரித்த முகத்துடனே மீள்கிறோம். மணத்திற்குப்போனது இதற்காகத்தானா? மணமக்களைப்பற்றிச் சிந்

தித்தோமா ; மணவீட்டிலே நாம்பெற்ற யாவும் அம்மணமக்களின் சார்பிலேதானே? கலியாணத்திற்குப் பலவகைப்பட்டோர் வருவது, அக்கலியாணத்திற்கு சாட்சியாக மட்டுமல்ல, ஆசிகூற மட்டுமல்ல, ஆண்டவனிடம் மணமக்கள் சார்பிலே ஒரு பிரார்த்தனை புரியவுந்தான். நாம் மணமக்களோடு வாழ்வு நெடுக நின்று துயர் தீர்க்கப்போவதில்லை. துணையளிக்கப் போவதுமில்லை. அது எல்லோருக்கும் சாத்தியமல்ல ; எந்த சமயத்திலும் சாத்தியமல்ல. ஆனல் இறைவனுக்கு எல்லாம் சாத்தியம். அவனை அவர்களின் துணைக்கழைத்து வேண்டுதல் புரிவது இயலாததொன்ரு ?

ஒரு நண்பர் தமக்கு உத்தியோக உயர்வு கிடைத்ததற்காக 'டீபார்ட்டி' ஒன்று ஏற்பாடு செய்கிருர். ஒருவர் தமது பிறந்த நாளைக் கொண்டாடி விருந்தொன்று நடத்துகிருர். மற்ருெருவர் தமக்கு பெரும்பரிசு கிடைத்தால் 'பிக்னிக்'கு திட்டம் போடுகிருர். இவர்கள் எல்லோரும் நமக்கு அழைப்பு விடுகிருர்கள். நாமும் போகிறேம். பரிகாசத்திலும், பேச்சிலும் பொழுதோட்டி வீடு திரும்பி விடுகிறேம். இவ்வளவு போதுமா அந்த நண்பருக்கு ? ஆம், அவருக்கு அவ்வளவு போதுமானதுதான். ஆனல் நம்முடைய கடமை ஒன்று பாக்கி நின்று விடுகிறது. நம்மையெல்லாம் அழைத்து இன்பமூட்டிய அந்த நண்பரின் முன்னேற்றப் பெருக்கத்திற்கு உளந்தோய்ந்ததொரு வேண்டுகோளை ஆண்டவனுக்கு அனுப்ப வேண்டும்.

நமது நண்பர் ஒருவர் திடீரென்று படுக்கையில் விழுந்து விடுகிருர். நாம் அவரைப்போய்ப் பார்க்கிறேம். "ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் ; இன்னும் இரண்டு நாட்களில் சரியாகி விடும்" என்று தெம்பான வார்த்தைகளைத் தந்து வருகிறேம். அதன்பின் சாதாரணமாக நாம் அவரை நினைப்பதில்லை. "அவரைத்தான் போய்ப்பார்த்தாகி விட்டதே" என்ற எண்ணத்துடனேயே இருந்து விடுகிறேம். நாட்கள் பல கழிந்தாலும், நாம் தெம்பு கொடுத்து வந்தோமே அந்த வார்த்தைகள் நமக்கு நினைவு வருவதில்லை. ஏனென்றல் நாம் அவ்வார்த்தைகளை நோயாளியை உற்சாகப்படுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கத்தால் சொன்னேம். உள்ளம் உணர்ந்து சொன்னேமா

என்றால் இல்லை. உள்ளமறிந்து சொல்லி யிருந்தோமானால் நமக்கு அதைப்பற்றிய நல்ல நினைவு இருக்கும். அதுமட்டுமல்ல நம் கடமை. நோயாளி சீக்கிரமே நலமடைய வேண்டுமென்று இறைவனிடம் வேண்டுதல் செய்ய வேண்டும். உதட்டளவிலே நமது கடமை முடிந்துவிடக்கூடாது. நாம் அவரது பக்கலிலே இருந்து உதவி செய்யப்போவதில்லை. அவரது குடும்பச் செலவுக்கு ஒத்தாசை செய்யப்போவதுமில்லை. உள்ளத்துணர்ச்சியோடு இறைவனிடம் அவரது நலி நீங்கப்பிரார்த்தனை புரிய முடியாதா? நோயாளி நமது பகைவரல்லவே!

அன்றாட வாழ்விலே எத்தனையோ சந்தர்ப்பங்களிலே நாம் உபயோகப்படுத்தும் சொற்கள், "ஸாரி" (Sorry) "தாங்க்ஸ்" (Thanks) "கன்கிராஜுலேஷன்ஸ்" (Congratulations) "வெரி கிலாட் டு இயர்" (Very glad to hear) முதலியனவாகும்.

"Sorry", 'வருந்துகிறேன்' என்று நாம் சொல்லும் எத்தனையோ சமயங்களிலே ஒருசிலவற்றில்தான் நாம் உண்மையாக மனம் வருந்திச் சொல்கிறோம். மற்றெல்லாச் சமயங்களிலும் பிறரது மனம் வருந்துமே என்று அதற்காகத்தான் "Sorry" என்கிறோமே தவிர நமது உள்ளத்து வருத்தத்தை வெளியிடவல்ல உதட்டிற்கும், உள்ளத்திற்கும் துளிக்கூட சம்மந்தமேயில்லை.

"Thanks" என்று சொல்வது ஒரு நவநாகரீகமான பழக்கமாகத்தோன்றுகிறதே தவிர உள்ளம் உணர்ந்து நாவு நன்றி செலுத்தும் பண்புச்சொல்லாக பெரும்பாலும் புழங்கவில்லை. எடுத்ததெற்கெல்லாம் "தாங்க்ஸ்" சொல்கிறோம். நாம் பிறருக்கு மகிழ்ச்சியூட்ட இதைச்சொல்கிறோமே தவிர நமது மகிழ்ச்சியைக் காட்டவல்ல.

இந்த இனத்திலே சேர்ந்தவைதான் "Congratulations", "Glad to hear"—இன்னும் இதைப்போன்ற அன்றாட வாழ்விலே பயன்படும் சொற்கள். இந்த முறை மறைந்தொழிய வேண்டும்.

நாம் கலந்துகொள்ளும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் நமக்குமுள்ள கடமையைக் காணவேண்டும். உதட்டிற்கும் உள்ளத்

திற்கும் ஒற்றுமை வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் உள்ளத்தின் உடன்பாடு வேண்டும்.

இறைவனுக்கு அனுப்புகின்ற கோரிக்கை, ஒரு உயர்தர உத்தியோகஸ்தருக்கு அனுப்புகின்ற விண்ணப்பம் பெறுகின்ற மதிப்பைவிட பல்லாயிர மடங்கு பெருமதிப்பை இறைவன் திருமுன் பெறுகிறது. அது காகிதக்குப்பைக் கூடையிலோ, கவனிக்கப்படாத பல தபால்களில் ஒன்ருகவோ கலந்து விடுவதில்லை.

ஆண்டவனின் பெருவலிமையை உணர்ந்து சொல்லுக்கும் செயலுக்கும் மனத்தின் உடன்பாடு பெற்று வாழ்ந்தால், வாழ்விலே நிச்சயமாக நறுமணம் கமழும்.

A. Subramanian, B. A.

காற்றை கண்ணுல் காணமுடியுமா?

"சந்திர மண்டலத்திற்கு மனிதர்கள் செல்லமுடியுமா? என்று பித்துப்பிடித்த விஞ்ஞானிகள் கேட்பது போல, காற்றைக் காண முடியுமா?— என்று கேட்கிருயே, உனக்கு என்ன பைத்தியமா பிடித்துவிட்டது! காற்று காணமுடியாத பொருள் என்றல்லவா இதுவரையில் நாங்கள் படித்திருக்கிரோம்," என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றுகிறதல்லவா?

ஆம்; காற்றை சாதாரண நிலையில் பார்க்க முடியாது தான். பின் என்ன — மைக்ராஸ் கோப்பால் பார்க்க முடியுமா? எந்த "கோப்" பும் வேண்டியதில்லை; சாதாரண கண்களாலேயே காணமுடியும். அப்படியெனில் தேவலோகத்திலுள்ள காற்று கண்களுக்குத் தெரியுமா என்ன?— தேவலோகத்தை யாரப்பா கண்டது; இந்த உலகத்திலுள்ள வடதுருவத்தை அடைவதே கடினமா இருக்கும்பொழுது! பின் எப்படித்தான் காற்றைக்காண்பது?

காற்று சாதாரணமாக வாயுநிலையில் இருக்கிறது. அப்பொழுது காற்றை நாம் காண முடியாதுதான். காற்றினு

டைய அழுத்தம் உயரச்செல்லச்செல்ல குறைகிறது என்பது நாம்அறிந்ததுதானே. சைக்கிள்சக்கரத்தினுள் காற்றைஅடித்து காற்றின் அழுத்தத்தை அதிகப்படுத்துகிறோமல்லவா; அது போல, நம்மைச்சூழ்ந்துள்ள காற்றின் அழுத்தத்தைப்போன்று சுமார் 200 அல்லது 300 மடங்கு அழுத்தத்தை மிகைப்படுத்திய காற்றைத் திடீரென குளிரச்செய்தால், அப்பொழுது காற்று நம் கண்களுக்குத் தெரியத் தொடங்குகின்றது — அதாவது காற்று, தண்ணீர் போன்ற திரவநிலையை அடைகிறது. அப்பொழுது திரவநிலையிலுள்ள காற்று நம் கண்களுக்குத்தெரியத் தானே செய்யும்.

காற்றைத் திடீரெனக் குளிரச்செய்வதற்குப் பல வழிகளுண்டு. மண்பானையில் உள்ள தண்ணீர் எப்படி குளிர்ந்து விடுகிறது? மண்பானையிலுள்ள நுண்ணிய துளைகளினூடே வெளியே கசியும் நீர்ஆவியாகும்பொழுது தன்னிடத்திலுள்ள வெப்பத்தையே பயன்படுத்திக்கொள்கிறது. எனவேதான் மண்பானையிலுள்ள நீர் மிகக் குளிர்ச்சியுறுகிறது. இவ்வாறே அதிக அழுத்தமுள்ள காற்றை, தானே ஆவியாகுமாறு செய்தால் அப்பொழுது தன்னிடத்திலுள்ள வெப்பத்தை விட்டு உடனே குளிர்வடைகிறது.

குளிரச்செய்வதற்கு வேறொருமுறை கூட உண்டு. அதிக அழுத்தமுள்ள காற்றை, அழுத்தம் குறைந்த இடத்திற்கு, மிகச்சிறுதுளை வழியாகப் புக விடும்பொழுது முன்னிருந்த வெப்ப நிலையில் முக்கால் பகுதி குறைந்து விடுகிறது.

எனவே, நாம் காற்றைக்காண முடியும் என்பது தெளிவாகிறதல்லவா! "என்னப்பா நீ தண்ணீரைக் காட்டி இது தான் காற்று எனக்கூறுகிறாய்"— என்று உடனே கேள்வி எழுப்பி விடாதீர்கள். சற்று சிந்தனை தேவை. அந்த சோதனைப்புட்டியில் இருப்பது காற்றுதான்; தண்ணீர் உருவமாக மாறியிருக்கிறது. தண்ணீரையா ஊற்றி அது காற்று என நவில்கிறேன்.— இல்லவே இல்லை. காற்று திரவமாக மாற்றம் அடைந்திருக்கிறது; அப்பொழுது நம் கண்களுக்குத் தெரிகிறது.— அவ்வளவுதான்.

விஞ்ஞானம் என்பது தந்திரமல்ல; மந்திரத்தால் மாஞ்செடி வளரச்செய்வதல்ல. விஞ்ஞானம் ஒரு நடை முறை உண்மை.

M. RAJARAM, B. Sc.

'பொய்க் கனு'

உரையாடல் :—தோழியும் தலைவியும்

தோழி :— விரைவில் தலைவர் வந்திடுவார் என்று எத்தனை தரம் கூறினாலும் நீ கேட்கமாட்டேன் என்கிறாயே! அதென்ன! அவர் உன்னை வரைந்துகொள்ளவே பொருள் தேடி வரப் போயுள்ளார். விரைவில் வந்திடுவார். உடலை வருத்திக் கொள்ளாதே. அவர் வரும் வரையில் துன்பம் பொறுத்து மன அமைதியாக இரு அம்மா!

தலைவி :— நான் எவ்வளவு நாட்கள்தான் பொறுத்திருப்பது? நான் பொறுத்துக்கொண்டிருந்தாலும் கனவுவந்து என்னை அடிக்கடி துன்புறுத்துகின்றதே! நான் என்னசெய்வேன் தோழி!

தோழி :— அப்படிப்பட்ட கனவு யாதம்மா? உன்னை வருத்தக் கூடிய கனவு! தயவு செய்து அக்கனவினைத்தான் எனக்குச் சொல்லு பார்ப்போம்.

தலைவி :— தோழி! நன்றாய்க் கேள். ஊக்கமாய்க் கேள். நம் தலைவர் காணும்போது விரைவில் உன்னை மணந்துகொள் கிறேன் மணந்துகொள்கிறேன் எனக் கூறுகின்றாரே யொழிய செயலில் அதனைக் காணோம். இப்படியே பொய் கூறிச் செல்வதில் அவர் மிகவும் சமர்த்தரடி.

தோழி :— உன் கனவினைச் சொல் என்றால் தலைவரைப் பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டாயே! கனவினைச் சொல்லம்மா! ஊம்.

தலைவி :— சொல்கிறேன். சொல்கிறேன். நேற்று இரவில்

தோழி :— என்ன? நேற்று இரவில் என்று ஆரம்பித்தாய்! உடனே நிறுத்திவிட்டாய் சொல்லம்மா கூச்சமின்றி சொல்லு!

தலைவி :— நேற்றிரவு தலைவர் வந்தார்.

தோழி :— உண்மையாகவா?

தலைவி :— ஆம் வந்தார்.

தோழி :— பின் தலைவர் வரவில்லை வரவில்லையென ஓயாமல் சொல்லி உடலிளைக்கிறாயே! சரி, வந்து என்ன செய்தார்?

தலைவி :- அவர் வந்து என்னைத் தழுவினர். நான் அளவில்லாத ஆனந்தங் கொண்டேன். அப்பொழுது எனக்கு மணிவாசகர் பாடிய "ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓராருயிர் ஈருருக்கொண்டு ஆனந்த வெள்ளத்திடை திளைத்தாலொக்கும்" என்ற திருக்கோவையார் பாடல் நினைவிற்கு வந்ததடி. என்ன இன்பமாயிருந்தோம் நாங்களிருவரும் தெரியுமா!

தோழி :- (சிரித்துக்கொண்டே) உண்மையாகவா?

தலைவி :- உண்மையாகவே நாங்களிருவரும் பேரின்ப நிலையிலிருந்தோம். ஆனல்.........

தோழி :- ஆனல் என்ன?

தலைவி .- நான் சொன்னதெல்லாம் கனவடி—கனவில் இம்மாதிரியே கண்டேன் இம்மாதிரி அடிக்கடி இப் பொய் கனு வந்து என்னைத் துன்புறுத்துகிறதடி. இதனல் நான் பெரிதும் ஏமாற்றம் அடைந்தவளாய் உடலிளைக்கிறேன்.

தோழி :- நீ சொல்வது பொய் கனுவென்று நான் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

தலைவி :- உண்மையில் நான் கண்டது பொய்க் கனுதான். ஏன் அப்படிக் கூறுகின்றேன் என்ருல் என்னை அக் கனு மயங்க வைத்துவிட்டதடி. நான் முன் சொன்னவாறு கனு கண்டேனே என்னவோ உடனே விரைவாக எழுந்தேன். எழுந்து என் படுக்கை முழுமையும் என் தலைவர் இருக்கின்ருரா எனத் தேடினேன். ஆனல் அவர் காணப்படவில்லை. உடனே நான் உள்ளம் சோர்ந்தவளாய் குவளை மலர் பரப்பிய என் படுக்கையில் அப்படியே சாய்ந்துவிட்டேன் அப்பொழுதுதான் அவரது திறன் எனக்குப் புலனுயிற்று. அவர் திறம் என்ன என்று என்னைக் கேட்கத் தொடங்குகிருய் நீ. ஆனல் நானே சொல்கிறேன் கேள். நான் தூங்கும்போது கனவில் என் தோள்மேலராயிருக்கின்ருர். விழித்தாலோ என் நெஞ்சிடத்தில் உள்ளவராகிருர். இது அவரது அறிய திறனல்லவா! இதனைத் திருவள்ளுவர்கூட என்னைப்போன்ற ஒரு தலைவி கனவில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை

"துஞ்சுங்கால் தோள் மேலராகி விழிக்குங்கால்
நெஞ்சகத்தர் ஆவர் விரைந்து" என அவள் கூறுவது போலக் கூறியுள்ளார்போலும். ஆகவே நான் என் தலைவரைப் படுக்கையில் தேடி ஏமாற்றம் அடைந்தவளாய் இரவு முழுமையும் தூக்கமின்றி வருந்திக்கொண்டு தனிமையாக இருந்தேன். என் நிலைமை மிகவும் இரங்கத் தக்கதாகும். ஆனால் என்னிலை கண்டு இரங்குவார் யார்? ஒருவருமில்லை.

இந் நிகழ்ச்சி சங்க நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகை என்ற அகப்பொருள் நூலில் ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது அப் பாடல்

"கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வலாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகை பொய்க்கனா மருட்ட ஏற்றெழுந்து
அமளி தைவந்தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியென் மன்ற அளியென் யானே" என்பதாகும்.

என்ன அழகான பாடல்! இதில் என்னவிதமாக தலைவியின் உண்மை அனுபவம் சித்திரிக்கப்பட்டுள்ளது! இத்தகைய பல பாடல்களைச் சங்க நூல்களிலும் பிற நூல்களிலும் நாம் பார்க்கலாம். ஆனால் கனவின் தன்மை பலவகையாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அன்றாட வாழ்க்கையில் நாம் யார் யாரோடு பேசுகிறோமோ யார் யாரோடு விளையாடுகிறோமோ அவர்களோடு கனவிலும் நாம் பேசுகிறோம் விளையாடுகிறோம். எந்தக் காட்சியைப் பகலில் அதாவது நனவில் பார்க்கிறோமோ அதனையே நாம் கனவில் காண்கிறோம். சிற்சில சமயங்களில் ஒரு சில அமைப்புகளை நூல் வாயிலாகவோ அல்லது பிறர் சொல்ல அதன் மூலமோ நாம் கருத்தில் கொண்டு ஒரு பொருளையோ ஒருவித காட்சியையோ உருவாக்கிவிடுகிறோம். அதனையே நாம் நனவில் கண்ணால் கண்டதுபோல் கனவில் காண்கிறோம். சிற்சில சமயங்களில் நாம் ஒரு சிலரைக் கண்டிருப்போம் பேசியிருக்கமாட்டோம் ஆனால் கனவில்

அவர்களோடு பேசுவோம். நனவில் என்ன பயன் அடை கிறோமோ அதே பயனை நாம் கனவிலும் அடைவதாகப் பார்க்கிறோம். மாணவர்கள் தமது வெற்றியை எண்ணிக் கொண்டேயிருப்பதால் கனவில் வெற்றிபெற்றதாக செய்தித் தாட்களிலும் தமது எண் இருப்பதாகக் காண் கிறார்கள். பிறகு உண்மையிலே நனவில் அவ்விதமே நிகழுவதையும் கண்டு மகிழ்கிறார்கள் அன்றியும் சிலர் இனி நிகழப்போவதை முன்பாகவே கனவில் கண்டு பின் அக் கனவின்படியே நிகழ்வதை எண்ணி கனவு பலித்தது என்றும் இக் கனவு நள்ளிரவில் கண்டது அதனால் பலித் தது என்றும் கூறிக்கொள்கிறார்கள். பக்தர்களுக்கு முனிவர்களோ பெரியவர்களோ வந்து ஏதோ சொல்லிப் போனதாகவும் பின் அவ்விதமே நடந்ததாகவும் நாம் கதையும் படிக்கிறோம். இன்னின்ன காலத்தில் இன்னின்ன பொருள்களைக் கனவில் கண்டாலும் இப்படி இப்படி கனவு கண்டாலும் அதற்குத் தக்கபடி பயன் உண்டு என கனு நூல் என்ற நூலும் கூறுகிறது. ஆனால் கனவு பலித்தது என அனைவரும் கூறுவதில்லை. ஏதோ ஒரு சிலருக்குப் பலிக்கிறது ஒரு சிலருக்குப் பெரும்பாலும் பலிப்பதில்லை. இதற்கெல்லாம் மனம்தான் காரணம். மனம் நல்ல நிலை யில் இருந்தால் கனவு காணுதல் என்பதும் நிகழாது. நல்ல நித்திரை செய்யமுடியும், அதனால் உடலும் நலமுறும். நாளெல்லாம் ஓயாது ஏதாவதொன்றை எண்ணி பேசிக் கொண்டிருப்பதால் கனவு காண நேர்கிறது, மனம் அமைதியும் நல்லனவற்றை எண்ணுவதும் ஆகிய இரண் டையும் உடையதாயிருக்கவேண்டும். அதற்கு உடல் வள மும் வேண்டும். உளவளமும் உடல்வளமும் இல்லாவிட் டால் கனவுகூட சில சமயங்களில் உயிருக்கு உலைவைக்கக் கூடும். எனவே எந்த நிகழ்ச்சியும் நனவில் கண்டுவிடுவ தோடு நின்றுவிட்டால் கனவே தோன்றாது. நனவில் தான் எண்ணுகிறபடி நிகழாது போவதால்தான் அது முடியும் வரை அதை முடிக்கும் முறையை அங்ஙனம் முடிந்தால் தான் எய்தும் பயனை இன்னோரன்னவற்றை எண்ணச் செய்கிறது. இந்த எண்ணமே கனவாகிறது இரவில்.

இதனால் நல்ல நித்திரை இன்றி உடல் கெடுகிறது. உள்ளம் சோர்வடைகிறது. இதனையறியாத காரணத்தால் தான் தோழி தலைவியை ஆற்றி இரு ஆற்றி இரு என்றாள். ஆனால் தலைவி தன் நிலையினைத் தோழியிடம் தெள்ளத் தெளிய விளக்கிவிட்டான்.

வித்வான் K. சம்பந்தம்,
தமிழாசிரியர்.

எவ்வரடி இங்க் உபயோகியுங்கள்

எல்லா கடைகளிலும் கிடைக்கும்

எவ்வரடி இங்க் மானுபாக்டரி, கடலூர் O. T.

தமிழின் உயர்வும் அதனைப் போற்றும் நெறியும்

இனிமை என்ற பொருள் தரும்தமிழ்மொழி இந்தியாவின் தென்திசையில் வழங்கப்பட்டு வருகிறது. பண்டைக்காலத்தில் இம்மொழி வழங்கிய இடம் தமிழகம் என அழைக்கப்பட்டு வந்தது. அத்தமிழகம், சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு எனும் முப்பெருநாடுகளாகப்பிரிக்கப்பட்டு சேரர், சோழர் பாண்டியர் என்னும் மூவரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இம்மூன்று நாடுகளிலும் தமிழே அரசியல் மொழியாக இருந்தது. தமிழ் மக்கள் அனைவரும் தமிழை விரும்பிக்கற்று வந்தனர். தமிழ்ப்புலவர்களை அரசர்கள் அதிகமாய் ஆதரித்து வந்தார்கள். பாண்டிய மன்னர்கள் தமிழப்புலவர்களைச்சேர்த்துத் தமிழ்ச்சங்கங்களை நிறுவினர்கள். அப்புலவர்கள் அப்போது இயற்றியநூல்கள் இப்போது 'சங்கநூல்கள்' என வழங்குகின்றன முற்காலத்திய தமிழர்களின் கல்வி, வாழ்க்கை, வாணியம் மதநெறி, வீரம், கைத்தொழில், போர்நெறி முதலிய பல அரிய கருத்துக்களை இந்நூல்கள் நமக்கு உணர்த்துகின்றன. முற்காலத்திலேயே தமிழின் பெருமையைப்பற்றி மாபெரும் புலவர்கள் தாங்கள் எழுதிய இலக்கியங்களில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறுர்கள் "தமிழ் மாருதம்" என்று சேக்கிழாரும், "தமிழ்தழீஇய சாயலவர்" என்று திருத்தக்க தேவரும், 'வண்டு தமிழ்ப் பாட்டு இசைக்கும் தாமரை' என்று கம்பரும் கூறியவைகளிலிருந்து அக்காலத்திலேயே தமிழ் எத்தகைய பெருமையுடையதாய் இருந்திருக்க வேண்டும் எனத்தெரிகிறதல்லவா !

இந்த இனிய மொழிக்கு எழுத்து .சொல். பொருள் யாப்பு, அணி என ஐந்து இலக்கணம் அமைந்திருப்பது போன்று வேறு எந்த மொழிக்கும் அமைந்திலது என்று பல பழையமொழிகளையும் கற்றுவல்ல புலவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளிலும் கட்டுரைகளிலும் கூறியுள்ளார்கள். இம்மொழி நாட்டுப் பற்றையும். ஒற்றுமை உணர்ச்சியையும், வீர எழுச்சியையும் அளிக்கும் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தது. இது தேசப்பற்றை உண்டு பண்ணும் என்பதற்கு பாரதியார்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே — எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே — ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று கூறிய வீரமொழியே சான்றாகும்.

மேனாட்டு அறிஞர் வின்ஸ்லோ 'தமிழ்மொழி செய்யுள் அமைப்பில் கிரேக்க மொழியினையும்: இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்ல வல்லது' என்றும், G. U. போப் என்னும் பெரியார் தமிழ் எம்மொழிக்கும் இழிந்ததன்று என்றும் கூறுவதிலிருந்து நம் செந்தமிழ் மொழியின் சிறப்பு நமக்குத் தெரிகிறதல்லவா!

இம்மொழி ஒரு காலத்தில் இந்தியத்துணைக்கண்டம் முழுமையும கிழக்கிந்தியத்தீவுகளத்தனையிலும் பரவி யிருந்தது என்றால் அது ஒரு போதும் மிகையாகாது. தமிழின் இலக்கண அமைப்புகளத்தனையும் மேற்கூறிய இடங்களில் உள்ள மொழிகளில் உள்ளன. அன்றியும் தமிழ்ச் சொற்கள் திரிந்தும் சிதைந்தும் வழக்கிலுள்ளன. அன்றியும் தமிழர்தம் பண்பாட்டையும் நாகரீகத்தையும் அங்கெல்லாம் நாம் காண்கின்றோமாகையால் ஒரு காலத்தில் அங்கும் அருமைத் தமிழன்னை சீர்பெற விளங்கியிருந்தாள் என கூறவேண்டியுளது.

நமது உலகத் தந்தை காந்திப்பெரியார்கூட 'தமது சிறைச்சாலை அனுபவங்கள்' என்னும் கட்டுரையில் தமிழர்கள் மொழியைக் கருத்தூன்றிக் கற்பதில் சென்ற மாதத்தைக் கழித்தேன். எவ்வளவுக்குக் கற்றேனோ அவ்வளவுக்கு அதன் அழகுகளையும் உணர்ந்தேன் என்று கூறுவதை நம் மனத்தில் எப்பொழுதும் இறுத்தல் வேண்டும்.

எனதன்பிற்குரிய மாணவ மாணவிகளே! நீங்கள் தமிழை ஊக்கத்துடன் கற்றுப் பெரியவர்களான பிறகு, ஆங்கிலம் முதலிய அந்நிய மொழிகளிலுள்ள அரிய பெரிய கருத்துக்களைத் தமிழிலே மொழி பெயர்க்கவும், பெயர்க்கச் செய்யவும் வேண்டும். நீங்கள் உங்கள் பந்துக்களுடனும் மற்றவருடனும் பேசும்போதும், கடிதப் போக்குவரத்துச் செய்யும்போதும் நம் தாய்மொழியாகிய தமிழிலேயே பேசுதலும் எழுதுதலும் செய்ய வேண்டும். அரிய நூல்களை எழுதி தமிழ் நூல்களை அதிகப்

படுத்தல் வேண்டும். இன்றைய வரையில் நம் செந்தமிழிலுள்ள அரிய நூல்களை அந்நியர் அறிந்து போற்ற, அவர்கள் மொழியிலும், மொழி பெயர்க்கவேண்டும். அவர்கட்கும் கூடுமானால் மொழியைக் கற்பிக்கவும் வேண்டும். இனிய தமிழ்த் தாய்க்கு இன்று நாமெல்லோரும் செய்யவேண்டிய அரும் பணிகள் இவைகளே. இவைகளை விரைந்து செய்வோமானால் அப்பொழுதுதான் அருந் தமிழன்னையைப் போற்றி வணங்கினவர்களாக ஆவோம்.

வை. சௌந்திரபாண்டியன்,
ஆறும் படிவம் "ஆ" பிரிவு.

குறைந்த சார்ஜ்! குறித்தநேரம்!!

கடலூர் அச்சகம்

44, குமரக் கோவில் வீதி * கூடலூர் O. T.

குறிப்பு, பேரேடு புத்தகங்கள், பட்டியல், கார்டு, கவர், லெட்டர் பேடு, அட்டை பெட்டிகள், ரூலிங், பைண்டிங், மற்றும் அழகிய முறையில் கலர் அச்சுவேலைகள் செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்கள் :

V. R. சந்திரன் T. சுவாமிநாதன்

எங்கள் பள்ளியில் குடிமைப் பயிற்சி

குடிமைப்பயிற்சி என்பது உண்மையில் மாணவர்க்கு உற்சாகத்தை அளிக்கும் ஒரு பாடமாகும்.

குடிமைப் பயிற்சியின் மூலம் நாங்கள் பல விஷயங்களை அறிந்துகொள்கிறோம். அவைகளிற் சிலவற்றை எழுத ஆசைப் படுகிறேன்.

(Savings Bank) பணத்தை சேமிக்கும் பழக்கம் மாணவர்களிடம் அதிகமாக விருத்தியாகிறது. வீண் செலவு செய்யாமை, அவசியமான காரியங்களுக்காக பணத்தை மீத்து வைத்தல் முதலிய விஷயங்கள் எங்களிடம் அபிவிருத்தியாகிறது. சேவிங்ஸ் பாங்கியில் பணம் போடும் முறை, எடுக்கும் முறை, சேவிங்ஸ் பாங்க் புஸ்தகம் இவைகளைப் பற்றி அறிந்துகொள்கிறோம்.

பல இடங்களுக்கு ஒழுங்காய்ச் செல்லுதல், வருதல் (Queue) முதலியவை அதன் பிரயோஜனம் நன்கு புலப்படுகின்றன.

வகுப்பு நீதி மன்றம் (class council) அடிக்கடி கூட்டப்பட்டு அதில் வகுப்பில் நடக்கும் பலவித விஷயங்கள் விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

வகுப்பில் கூட்டுறவு முறைப்படி, வகுப்பிற்கு வேண்டிய மை, பென்சில், இரப்பர், மிட்டாய் முதலியவை விற்று அதில் வரக்கூடிய இலாபத்தால் கூட்டுறவு சங்கம் பல பெரிய பலன்களை அடைந்து வருகிறது.

குடிமைப் பயிற்சி வகுப்பில் பல விளையாட்டுக்களையும், கொடிகாட்டும் முறை அதாவது செமபோர் சைகையும் மோர்ஸ் சைகைகளையும் மற்றும் பயன் தருவனவற்றை பயின்று வருகிறோம். முதலுதவி செய்யும் முறையில் பயிலுதல் மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது. குடிமைப் பயிற்சி சம்பந்தமாக செய்த பல பிரயாணங்கள் பின்வருமாறு :—

நெய்வேலி :—

4—8—51-ஆம் தேதி விருத்தாசலத்துக்கும், கடலூருக்கும் இடையே உள்ள நெய்வேலி என்ற இடத்திற்கு உல்லாசப் பிரயாணம் சென்றோம். அங்கே முக்கியமான நிலக்கரி சுரங்கத்தைப் பார்த்தோம். இந்த சுரங்கத்தில் பழுப்பு நிலக்கரி (லிக்னைட்) அகப்படுகிறது. இந்த நிலக்கரியிலிருந்து பலவித பொருளகள் செய்யப்படுகின்றன. 1947-ஆம் ஆண்டு முதல் நிலக்கரி வெட்டி எடுக்கும் வேலை, மிக தீவிரமாக நடைபெற்று வருகிறது. இங்கே பல நீர் ஊற்றுகளும் (Artesian Wells) பல இயற்கை காட்சிகளும் இருக்கின்றன.

ஸ்தல அறிவு :—

4—12—51-ஆம் தேதி இவ்வூரிலுள்ள டாக்டர் வீடுகள், ஆஸ்பத்திரி, தந்தி ஆபீஸ், தபாலாபீஸ், கம்பெனிகள், போலிஸ் ஸ்டேஷன், ரயில்வேஸ்டேஷன், பார்க் முதலியவற்றை சென்று பார்வை இட்டு அவற்றைத் தரைப்படம் வரைந்து அந்த இடங்களை குறித்தோம்.

16—2—52-ஆம்தேதி கடலூரின் அருகில் உள்ள தோணித்துறை என்ற இடத்திற்குச் சென்றோம். அங்கு நாங்களே சமையல்செய்து பழகினோம். நாங்கள் குடிமைப் பயிற்சியில் கற்ற விளையாட்டுகளையும் விளையாடிக் களித்தோம். காயம் பட்டவர்களுக்குச் செய்யும் முதற் சிகிர்ச்சையை அப்பியாசித்துப்பழகினோம். சிறிது தூரம் படகில் பிரயாணம் சென்றோம்.

குடிமைப் பயிற்சி மிகவும் பிரயோஜனமாக இருப்பது எல்லோரும் அறிந்த விஷயம்.

க. ஜெகந்நாதன்,
மூன்றும் படிவம் 'ஆ' பிரிவு.

" கல்வியும் கைத்தொழிலும் "

மனித வாழ்விற்கு கல்வியும் கைத்தொழிலும் மிக மிக முக்கியம். உயிருக்கு உரம் கொடுப்பது கல்வி. உடலுக்கும் உரத்துடன் வளர்ச்சியையும் தரவல்லது கல்வி.

மனிதவாழ்க்கை சீரோடு அமையத்தக்க கட்டுப்பாடுகளை யும், முன்னோர்களின் வாழ்க்கைத் தத்துவங்களையும் அரசியல், பொருளாதாரம், சமூகம்; மதம்; பௌதிகம்; விஞ்ஞானம் போன்ற துறைகளையும் அறிந்து வளர்ச்சி அடையக் கல்வி பயன்படுகிறது. அதே சமயத்தில் மேற்கண்ட துறைகள் விருத்தி பெறக் கைத்தொழில் பெரிதும் பயன்படுகிறது.

இனி எடுத்துக்காட்டின் மூலம் பார்ப்போம். பாடசாலை நாம் அறிவு வளர்ச்சிபெற அமைக்கப்பட்டதுதான். உண்மை; மறுக்க முடியாது. அறிவை ஊட்டுபவர் ஆசிரியர்கள்; அதை யும் ஒப்புக்கொள்வோம்; சற்று சிந்தித்துப்பாருங்கள். இவ்வளவு அமைதியுடன் வகுப்பறையில் அமர்ந்து, பல உபகரணங்களுடன் நம்மை உற்சாகமூட்டி நம்மைக் கற்பனுமண்டபத்திற்கு இழுத்து மனத்தை பல வினாக்களின் மூலம் கிளறிவிட்டு, விடை பகரச் செய்வது எதனால்? இங்கு பல கட்டடங்களும், உட்காரும் பெஞ்சுகளும், கையாளும் சாமான்களும், புத்தகமும் ஆகிய இவைகளை வைத்துக்கொண்டல்லவா? நம் அறிவை எடை போடுகிறார், இங்குள்ள சுமார் 5, 6, கட்டடங்களும் எத்தனை கைத்தொழிலாளிகள் தங்கள் வியர்வையை இரத்தத்தைக் கொட்டிவடித்து அமைத்திருப்பார்கள்? மற்றைச் சாமான்களும் நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் நிறைந்த ஆலையில் வார்க்கப்படுகிறதுதானே? மேற்கண்ட இவைகளெல்லாம் கைத்தொழில் இல்லையேல் எப்படித்தான் நாம் இந்த இருபதாம் நூற்றாண்டின் நாகரீக வளர்ச்சியில், வினாடிக்கு வினாடி அறிவைப் பரிசோதித்து முன்னேற முடியும்.

சுருங்கக்கூறின் ஒரு மனிதனுக்கு தலையும் மார்பும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஒரு நாட்டிற்குக் கல்வியும் கைத்தொழிலும். உழைத்தால்தான் உயரமுடியும். அதுவும் அறிவுடன் உழைத்தால்தான் அதிகம் உயரமுடியும். கல்வியை

நம்பி வாழ்ந்தால் மனிதன் புத்தகங்களையும், எழுத்துகளையும் தான் சாப்பிடவேண்டும்.

மனிதன் தொழில் செய்யவேதான் இயற்கையாகவே கை, கால்களை பெற்ருன் என்பது அறிஞர்களுடைய முடிவு. ஆகவே மனிதன் கல்வியுடன் ஒரு தொழிலையும் கற்றிருக்கவேண்டும். இறுதியாக ஒரு நாட்டின் நிலையைச் சீர்தூக்கிப்பார்க்கும்போது அறிவு வளர்ச்சியுடன் தொழில் வளர்ச்சியும் சமமாகப் பெற்றிருந்தால்தான் வறுமையில்லாமல் இருக்கமுடியும். நம் தேசம் தற்போது தொழிலில் வளராததால் இப்போது நம் நாட்டில் பஞ்சம், இலஞ்சம், சூது, வறுமை, பசி, கொலை முதலியவைகள் சர்வ சாதாரணமாக வந்து நாடு சீரழியத் தொடங்கி விட்டது.

ஜப்பான், சீனு, இந்தோசீனு. அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகளைப்பாருங்கள். அவைகள் கைத்தொழில் பெருகிய நாடாக இருப்பதால்தான் அங்குள்ள மக்கள் வசதிக்கேற்ற தேவைகளைப் பெற்று சுகமாக வாழ்வைக்கழிக்கிருர்கள். ஆகவே பாரதியார் பொன்மொழிப்படி "உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்றபடி அறிவோம்பலுடன், தொழிலோம்பலையும் நடத்தி மேன்மை அடைவோமாக!

நலம்!!

ஞானசேகரன்.

மூன்ரும் படிவம், 'அ' பிரிவு.

Answer to Conundrums.

1. They are always longer in bed.
2. To let you pass through.
3. Because he appears after the storm is over.
4. A donkey.
5. Noise.
6. A bad husband.
7. Heat, because you frequently catch cold.
8. " H " because it is always in the midst of " Washing "
9. No, but AprilMay.
10. 325. The rest are Lent.

எது உண்மை

அன்று சனிக்கிழமை. முந்தின இரவு முழுவதும் மழை பெய்திருந்தால் தெருவில் தண்ணீர் ஆங்காங்கு தேங்கி நின்றது. விடுமுறை தினத்தில் "வம்பர் மகாநாடு" நடக்கவொட்டாது தடுத்த இந்த மழையை எனக்குச் சபிக்கத்தான் தோன்றிற்று. "ஏன்? குடையை எடுத்துக்கொண்டு போகிறதுதானே" என்பீர்கள். என் அம்மா ஓர் உத்திரவு போட்டால் அதற்குத் தடைசொல்ல யாருக்குத்தான் தைரியம் உண்டு. என் அப்பாவோ அவள் கிழித்தக் கோட்டைத் தாண்டாத் 'தர்ம பத்தன்' என்றால் நான் எம்மட்டும்.

பேசாமல் விஞ்ஞான நூலை கையிலெடுத்து சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். ஒளிக் கிரணங்கள் ஊடுருவிச் செல்லும் தன்மையைப் பற்றிய பாடம் அது. சூரியனின் ஒளிக் கதிர் மழைத் துளியை ஊடுருவிச் செல்வதால்தான் வானவில் ஏற்படுகிறது என்ற இடத்தை வாசித்தபொழுது "சுத்த அபத்தம்" என்ற சப்தம் கேட்டது. திடுக்கென திரும்பிப் பார்த்தேன். ஓர் சித்திரக்காரன் பலகையும், வர்ணக் குழைவு களையும், கோலையும் வைத்திருந்தான். ஏன் அப்பா எது சுத்த அபத்தம் என்றேன். நீ சற்றுமுன் சொன்னாயே சூரிய ஒளிக் கிரணத்தின் மகிமை அதுதான். பூலோகத்துக் கலைஞர்களுக்குத் தான் பூலோக வாசிகள் மதிப்புக் கொடுக்கவில்லை என்றால் மேலுலகத்தில் தேவேந்திரன் சபையிலுள்ள என்னையுமா மதிக்கவில்லை என்றான். 'நீ சொல்வது' ஒன்றும் புரிய வில்லையே என்று தடுமாறினேன்.

அதற்கு அவன் தம்பி நீ என்றாவது "விப்ஜியார்" என்ற கலைஞனைப் பற்றிக் கேள்விபட்டிருக்கிறாயா? நான்தான் அவன் எனக்கு இப் பெயரைச் சூட்டியவரே தேவேந்திரன்தான். ஒரு நாள் காலை மழை பெய்துகொண்டிருந்தது தேவேந்திரனுக்கு வெளியில் சுற்றிவர சாத்தியப்படவில்லை. அவர் என்னைப் பார்த்து ஏதாவது சித்திரம் வரை என்றார். எனக்குத் திடீரென எதை வரைய, இயற்கைக் காட்சிகளைப் பார்க்கக்கூடாமல் மழை பெய்கிறதே என்ற கவலை உண்டாயிற்று. அதை அறிந்த இந்திரன்: ஒன்றுமில்லாவிட்டாலும் வர்ணங்களைக் குழைத்து

ஏதாவது தீட்டேன் என்ருர். அந்த முடிவுதான் இந்த வில். அதில் நான் நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு இந்த நான்கையும் வைத்து 7-வித வர்ணங்களைத் தீட்டினேன். இதைப் பார்த்து பூரித்துப்போன தேவேந்திரன் எனக்கு "ஷிப்ஜியார்" என்ற பட்டத்தை அளித்தார் என்ருன்.

நான் அவனை என்னவிதமாக நினைப்பது 'பயித்தியக்காரன்' என்றே நினைத்தேன். நீ சொல்வது சரியல்ல. சூரியனின் ஒளி வெண்மை நிறமானது அதில் இலகு நீலம், ஆழ்ந்த நீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்பொன். சிவப்பு என 7 நிறங்கள் உண்டு. சூரியனின் கதிர்மழைத்துளியை ஊடுருவிச் செல்லும் போது, அந்த 7 நிறங்களும் தெளிவாக மறுகரையில் தெரிகின்றன. இதனுலேயே மழையும் பெய்து, சூரியனும் பிரகாசிக்கும் பொழுது சூரியன் இருக்கும் திசைக்கு எதிர்த்திசையில் வானவில் தோன்றுகிறது என்றேன். அவன் பெருத்த சத்தமாய் சிரித்து "விஞ்ஞானம்" உன்னை பயித்தியக்காரனுக்கு கிறது என்ருன்.

"ஏன் நீயும்தான் உன் கட்டுக்கதையால் அவனைப் பயித்தியமாய் ஆக்குகிருயே" என்ற சொல்லும் அதைத் தொடர்ந்து சிலர் கலகலவென்று நகைப்பதும் கேட்டு "இதென்ன விந்தை" என நினைக்குமுன் அப்ஸரஸ் தோன்ற 7-கன்னிகைகள் என் முன்தோன்றினர். அவர்கள் ஒவ்வொருவரும் வானவில்லின் ஒவ்வொரு நிறத்தில் சேலை உடுத்தியிருந்தனர். அவர்களில் ஒருத்தி "தம்பி நாங்கள் தேவ கன்னிகைகள். இவன் சொல்வது முற்றும் தவறு, இவனுக்குச் சித்திரம் தீட்டவே தெரியாது. மழை பெய்யும்பொழுது எங்களுக்கு மிகவும் குதூகலமாயிருக்கும். நாங்கள் 7 பேரும் வருண பகவானின் புதல்விகள் நாங்கள் மழை பெய்யும்பொழுது வான வீதியில் கண்ணுமூச்சி விளையாடுவோம். எங்கள் சேலைகளின் நிறங்களைப் பார்த்து நீங்கள் வானவில் என்று ஏமாறுகிறீர்கள்.

"இவன் சொல்வதுபோல அது சித்திரமாய் இருந்தால் நிறம் ஏழும் ஏன் சில சமயங்களில் தெரிவதில்லை. நாங்கள் ஒளிந்து விளையாடுவதால் தான் சில சமயங்களில் நிறங்கள் 4 அல்லது 5 தெரியும் ஆகவே எங்களைத்தான் பூலோகவாசிகள் "வான

வில்" ஆக்கிவிட்டார்கள்" என்றார்கள் அதைத்தொடர்ந்து அவர்கள் சிரித்த சிரிப்பு அப்பப்பா.

அண்ணா! அண்ணா! இதென்ன காலை நேரத்தில் தூக்கம் எழுந்திரு அண்ணா! மழைலேசாகத்தான் தூறுகிறது மேற்கே பார் அழகான "வானவில்" என்றாள் என் தங்கை. திடுக்கென விழித்தேன். விஞ்ஞானமா? கலைஞனின் சித்திரமா? அல்லது கன்னிகளின் விளையாட்டா இந்த "வான வில்" எது உண்மை? என்று ஆராய்ச்சி செய்து கொண்டே எழுந்து ஆவலாக வானவில்லைப்பார்க்கச் சென்றேன்.

சி. வே. ஜெயராமன்
5 ம் படிவம், 'அ' பிரிவு.

"A Book is the only Immortality"– Coate.

BABA'S POCKET DICTIONARY
ENGLISH TO ENGLISH & TAMIL
With Idioms & phrases — Price Rs. 2—8—0

WEBSTER'S DICTIONARY
(ENGLISH TO ENGLISH SCHOOL & OFFICE USE)
Rs. 4—8—0

We publish books on all subjects based on the Re-organised Syllabus for High, Secondary and Elementary Schools.

APPLY TO
T. V. CHELLAPPA SASTRY & SONS,
EDUCATIONAL PUBLISHERS,
2, PHILLIPS STREET, MADRAS-1.

எதிர்பாராத உதவி.

வேணுவும் பாலனும் ஒரு வகுப்பு மாணவர்கள். இவர்கள் படிப்பிலே மிகவும் கெட்டிக்காரர்கள். அதன்றி இருவரும் வகுப்பிலே முதலாகத்தேறும் திறமையுடையவர்கள். மேலும் இருவரும் ஆருயிர் நண்பர்கள். இவர்களில் வேணு ஒரு பெரும் செல்வந்தரின் மகன். பாலனோ ஒரு ஏழையின் மகன். பாலன் அடிக்கடி வேணுவின் வீட்டுக்குப்போய்க்கொண்டு இருப்பான். வேணுவின் வீட்டிலிருக்கும் நலங்களைப் பாலன் பார்க்கும் போது தனக்கும் இந்தமாதிரி பணம் இருந்தால் தானும் நலமாயிருக்கலாமே என்ற எண்ணம் பாலனுக்குத் தோன்றும். வேணுவும் பாலனும் இறுதி வகுப்பு படிக்கும்போது (S. S. L. C)அவர்களின் பள்ளிக்கூடத்திலே இறுதி வகுப்பு படிக்கும் மாணவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்தனர். அதாவது திருச்சிக்குப்போய் அங்குள்ள பல இனிய காட்சிகளைப்பார்க்க வேண்டும் என்ற திட்டம்தான். சுற்றுப்பிரயாணம் செய்ய விரும்புவோர் ரூ 20 கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. வேணுவுக்கு பணத்திற்கு என்ன குறைவு? அவன் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு தயாராகி விட்டான். ஆனல் பாலனுக்கோ படிப்புக்கு சம்பளம் கட்டவோ, புஸ்தகங்கள், நோட்டு புஸ்தகங்கள் முதலியன வாங்கவோ, அவன் தந்தையிடம் பணமில்லை. இந்நிலையில் அவன் தந்தை சுற்றுப்பிரயாணக் கட்டணத்தை செலுத்த எங்கு போவார்? (or) பாலுதான் தந்தையின்றி யாரிடம் போய் பணம் கேட்பான்? தன் நிலையை எண்ணி விருப்பத்தைக் கைவிட்டான். பாலன் சுற்றுப்பிரயாணத்திற்குத் தயாராயில்லை என்ற செய்தி வேணுவுக்குத் தெரிந்தது. உடனே வேணு பாலனின் வீட்டிற்கு வந்து 'என்ன பாலன் வரமாட்டாயா நீ? ஏன் வரமாட்டாய்? பணமில்லையா!! (or) உடல் சௌகரியமில்லையா ! (or) வர விருப்பமில்லையா !'' போன்ற பல கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனன்! பாலன் தன் நிலைமையைத் தெரிவித்தான். இதனை அறிந்தவுடன் வேணு அவனுக்கு சுற்றுப்பிரயாணக் கட்டணம் ரூ. 20யை தான் செலுத்தி அவனை திருச்சிக்கு அழைத்துப்போனன். இருவரும் சந்தோஷமாகச் சென்று வந்தனர். பிறகு ஒரு நாள் இருவரும் உல்லாச

மாகப் படகிலே போய்வருவோம் என்று கிளம்பினர். இனிமையான பாட்டைப் பாடிக்கொண்டு படகிலே சென்றுக் கொண்டிருந்தனர். தான் துடுப்பு ஏந்தி படகைச் செலுத்திக் கொண்டு போன பாலன் திடீரென்று மயக்கத்தினால் படகில் சாய்ந்து தவறி ஆற்றில் விழுந்து விட்டான். அதனைக்கண்டான் வேணு. தன் நண்பனுக்கு ஏற்பட்ட துன்ப நிலையை அறிந்த வேணு நமக்கு என்ன என்று சும்மாயிருப்பானா? அதுவா உண்மை நண்பனுக்கு அழகு. உடனே தன் உயிரையும் பொருட்படுத்தாது ஆற்றிலே வேணு குதித்தான். ஆனால் அதிர்ஷ்டவசமாக வேணுவுக்கு நீந்தத்தெரியும் கடவுள் கிருபையால் பாலனை இழுத்துக்கொண்டு ஆற்றிலே நீந்திக்கொண்டு வந்து வேணு கரையேறினான். மூர்ச்சையாயிருந்த பாலனை அருகிலிருந்த வீட்டுக்குத் தூக்கிகொண்டுக் போய் நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் வேணு படுக்க வைத்தான். உடனே மருத்துவசிகிச்சை செய்யப்பட்டது. பிறகு பாலனுக்கு கடவுளருளால் உயிர்வந்து மூர்ச்சை தெளிந்து இருவரும் தத்தம் வீட்டிற்குச்சுகமாகச் சென்றனர். என்னே! நண்பனென்றால் இப்படியல்லவா எல்லோருக்கும் வாய்க்கவேண்டும். பாலன் இறுதி வகுப்பு படித்துக்கொன்டிருக்கும்போதே அவனுக்கு ஒரு துன்ப நிகழ்ச்சி ஏற்பட்டது. அது என்னவெனமுல் அவன் தந்தை பூவுலகை விட்டு புகழூலகை எய்தினர். அச்சமயம் அவனுக்கு வயது வந்த தங்கை ஒருவள் இருந்தாள். அவள் பெயர் மீனா. தந்தை உயிருடன் இருக்கும்போதே அவளுக்கு வரன் தேடிக்கொண்டிருந்தார். அவள் பாக்கியம் ஏதும் வரன் கிடைக்கவில்லை. தந்தையும் மகளின் கல்யாணத்தைப் பார்க்க கொடுத்துவைக்கவில்லை. ஆனால் எல்லாம் நன்மையாகவே முடிந்தது. தந்தை இறந்ததனால் தங்கை மீனாவுக்கு வரன் தேடும் பொறுப்பு பாலனைச் சார்ந்தது. பாலன் இறுதிவகுப்பு (S. S. L. C.) பாஸ் பண்ணினானே இல்லையோ எங்கெங்கெல்லாமோ வேலைக்கு அலைந்தான். எங்கும் வேலை கிடைக்கவில்லை. அச்சமயம் அவன் நண்பன் வேணு இதை அறிந்தவனாய் தன் தந்தையின் ஜவுளிக் கம்பெனியில் பாலனுக்கு குமாஸ்தா வேலைக்கொடுத்தான். ஆனால் மாதச்சம்பளமோ ரூ. 50தான். அவன் இந்நிலையில் குடும்பத்தைக் கவனிப்பானா? தங்கைக்கு வரன் தேடுவானா?

தான் சுகஜீவியாய் வாழ்வானு? என்னசெய்வான் பாவம். அவன் நிலைமை அப்படியிருந்தது. அவனுல், குடும்பபாரத்தை (செலவை) பொறுக்க முடியவில்லை. மேலும் தங்கை மீனுவின் கலியாணத்துக்காக ரூ. 1000 தேவைபட்டது. ரூ 1000யை யாரிடம் போய்க் கேட்பது, யார் நமக்குத்தருவார்கள், தங்கைக்கு எந்த வரனை தேர்ந்தெடுப்பது போன்ற பல எண்ணங்கள் பாலனின் மனதில் தோன்றியது. சிலமணிநேரங்கள் யோசித்துப் பார்த்தான் பிறகு ஏதோ ஓர் எண்ணம் தோன்றியவனுய் வேணுவின் வீட்டிற்குச் சென்றுன்.

சென்று வேணுவினிடத்தில் தன் தங்கையின் திருமணத்திற்காக ரூ 1000 கடனுகத்தரவேண்டுமென்றும் தான் சம்பாதித்து சிறிது, சிறிதாக கடனைத் திருப்பிக்கொடுத்துவிடுவதாக பாலன் கேட்டான். இதனைக்கேட்ட வேணு தான் மீனுவைக் கலியாணம் செய்துக்கொள்ள விருப்பமாயிருப்பதாகவும் அதல்லாமல் தன் தங்கை கமலாவை பாலனுக்குத் திருமணம் செய்து வைக்க, தனக்கு விருப்பமுள்ளதாகவும் பாலனிடத்தில் தெரிவித்தான். இவ்விஷயத்தை தன்தந்தையினிடம் தெரிவித்து அவர் விருப்பமறிந்து தான் பாலனின் வீட்டிற்கு வருவ்தாகவும் வேணு, பாலனுக்கு வாக்களித்தான். பாலனுக்கு இச்செய்தி 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டது போலாகிவிட்டது' உடனே பாலன் ஓடோடியும் தன்வீட்டிற்கு வந்தான். வந்து தன் தாய்க்கும் தங்கைக்கும் இச்செய்தியை அறிவித்து அவர்களின் விருப்பமறிந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் வேணுவும் தன் தாய், தந்தையின் விருப்பமறிந்து பாலனின் வீட்டிற்கு மிக்க மகிழ்ச்சியுடன் வந்தான். பிறகு வேணுவின் வீட்டாரும் பாலனின் வீட்டாரும் நன்னுள் குறித்து வேணுவுக்கும் மீனுவுக்கும்; பாலனுக்கும் கமலாவுக்கும் இனிதாகத் திருமணம் நடந்தேறியது. பிறகு பாலனின் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்து சுகஜீவியாய் மனைவியுடன் இனிதாக இல்லறம் நடத்தி வரலானுன்.

சுபம்.

மு. செ. கமாலுதீன்.
5ம் படிவம் "அ" பிரிவு,

அன்பர்களே!

பாலன் காபி ஒர்க்ஸ்

கூடலூர் O. T.

(ரயில்வே ஸ்டேஷன் எதிரில்)

★

மணத்திலும் குணத்திலும் ருசியிலும்
— சிறந்தது —

பாலன் காபி தூள்

★ ★ ★

உயர்ந்தரக காப்பிக் கொட்டையை
நல்லமுறையில் வறுத்து உடனுக்குடன்
அரைத்து வாசனையும் ருசியும்
போகாமல் மொத்தமாகவும் சில்லறை
யாகவும் விற்பனை செய்கிறோம்.

இன்றே வாங்கி உபயோகித்து ஆதரிக்க கோருகிறேன்.

★

தயாரிப்பவர்

S. தண்டபாணி செட்டி,

பாலன் காபி ஒர்க்ஸ் : : : கூடலூர் O. T.

"எனது ஆசைப் பெரியார்"

இங்கு எழுதப்பட்டிருக்கும், தலைப்பைக் கண்டதும் பலர் ஏதோ ஒரு புகழ்பெற்ற மனிதனைப்பற்றி இங்கு வரையப்பட்டிருக்கிறது என்று எண்ணலாம். ஆனல் அது உண்மைதான். தமிழ் நாட்டில் உள்ள, ஒவ்வொருவரும் அறிந்த, தமிழ் மொழிக்கே அழியாத புகழைத் தேடித்தந்த திருவள்ளுவரைப் பற்றி இங்கு வரையப்பட்டு இருக்கிறது.

தமிழ் நாட்டில் தோன்றித் தமிழுக்கு அழியாப் புகழைத் தந்த திருவள்ளுவரைப் பற்றி எழுதுவது என்றால் பாணர் தெருவில் இசையைப் பற்றிச் சொல்வது போன்றும், கொல்லர் தெருவில் ஊசி விற்பது போன்றும் இருக்கிறது. நான் ஏன் இங்கு இதை எழுதுகிறேன் என்று பலர் நினைக்கலாம். இன்னும் நம் நாட்டில் திருவள்ளுவர் யார் என்பதையும் அறியாதவர்கள் பலர் இருக்கின்றனர். அவ்வளவு தூரம் கல்வி அறிவில்லாதவர்களாக இருக்கின்றனர் நம் மக்கள். இனி வள்ளுவர் யார், அவர் எத்தன்மையான நூலை எழுதியுள்ளார் என்பதை ஆராய்வோம்.

இவர் மதுரையில் பிறந்து திருமயிலையில் வளர்ந்து வந்தார். இவருடைய தாய் தந்தையர் யார் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. அவருடைய தாய் தந்தையர் ஆதி, பகவன் என்று சிலர் சொல்லுகிறார்கள். இவர் வள்ளுவர் குடியில் பிறந்தவர். வள்ளுவர் என்ற சொல்லுக்கு வள்ளுவர்குடியில் தோன்றியவர் என்றும், வண்மை உடையவர் என்றும்கூறுகிறார்கள். இவரைப் புலவர் பலரும் தேவர் முதல் பாவலர், பொய்யில் புலவர், பெரு நாவலர் என்றும் வள்ளுவர் என்றும் சிறப்பித்துக் கூறுவர். இவர் கடைச் சங்ககாலப் புலவர். அதாவது 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.

இவர் இயற்றிய நூல் திருக்குறள். திருக்குறள் உலகத்திலேயே ஒப்பு உயர்வற்ற நீதிநூல். மிகச் சிறந்த வெண்பாக்களினாலே, குறுகிய அடிகளைப் பெற்றுச் சிறந்த உயரிய உள்ளக் கருத்துக்களை மக்களுக்கு அறிவிப்பதனால் இதற்கு இப் பெயர் வந்தது.

இது கடைச் சங்ககாலப் புலவர்களால் ஏற்படுத்தபட்ட பதினெண்கீழ் கணக்கு நூல்களில் ஒன்று. இதுவே முதல் நூலும் ஆகும். திருக்குறள் ஒரு குலத்துக்கு ஒரு படித்தான நீதி உரைக்காது. சைனு, ஜப்பான், இங்கிலாந்து முதலிய தேசங்களில் திருக்குறளை மொழி பெயர்த்து உள்ளனர். தமிழ் என்றாலே இனிமை என்பது பொருள். அத்தகைய மொழியில் உலகம் புகழும் திருக்குறள் என்ற நீதி நூல் இருப்பது நாமும் நம் முன்னோர்களும் செய்த பாக்கியமுமே.

வள்ளுவன் குறள் வையகம் எல்லாம் வாரி
இறையடா தமிழா

என்று நம் தமிழ்நாட்டு இன்னிசைப் புலவர்கள் பாடுகிறார்கள். இது நம் தமிழ் நாட்டில் உள்ள எல்லோருக்கும் உள்ள கடமையாகும். இவர்கள் இப்படி சிறப்பித்துக் கூறுவது நமக்கு அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுக்கின்றது அல்லவா? நாம் அறிவிக்கும் முன்னே எல்லோரும் அதைப் படித்துப் பொருள் ஆழத்தை அறிந்து தங்கள் மொழிகளில் மொழி பெயர்த்துக்கொண்டார்கள் என்றால் நம் நாட்டில் தோன்றிய திருக்குறள் எவ்வளவு சிறப்புள்ளது என்று தெரிகிறது அல்லவா?

ஆதலால் நம் தமிழ் நாட்டில் தோன்றிய அனைவரும் திருக்குறளைப் படித்து அதன்படி நடந்தால் நம் நாடு நன்மை பெறும். முக்கியமாக வருங்காலத் தலைவர்களாகிய, இப்பொழுது மாணவர்களாக இருக்கின்ற நாம் திருக்குறளைக் கற்று, படிக்காதவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அதன் பொருள் ஆழத்தை அறிந்து அதன்படி நடக்கச் செய்யவேண்டும். நம் நாடும் நன்மைபெறும் முன்னேற்றப் பாதையில் செல்லும். இதுவே என் ஆசை. நம் நாடு எல்லா நாடுகளுக்குள்ளும் திலகம் போன்று விளங்கும் என்பது நிச்சயம். இதற்குக் காரணரான எனது ஆசைப் பெரியார் திருவள்ளுவர் வாழ்க! அவர்தம் குறள்நெறி வாழ்க! வாழ்க திருவள்ளுவர்! வளர்க திருக்குறள்!

இராசா. துரைக்கண்ணு,
5-ஆம் படிவம் 'ஆ' பிரிவு.

மனிதன் யார்?

"அன்பு" எனும் சுடர்விளக்கு அகத்தில்உள்ளோன்
அறிவுக்கு மதிப்பீவோன்; "மேல் கீழ்" என்னும்
என்புருக்கி நோயுக்கு இடந்தராதோன்;
எல்லாம் ஒன்றென்றிருப்போன்; எப்போதும் தன்
இன்பத்திற்காகப் பிறன்வாழ்வைத் துன்ப
நெருப்பினிலே தள்ளுவதற்கு நினையா நெஞ்சோன்
துன்பங்கள் பலகோடித் தொடர்ந்தாலும், தன்
தூய்மையுளம் மாறாதோன் மனிதன் ஆவான்!

கருணைதவழ்கண்களிலே மனிதத்தன்மை
கார்மேகத்துள் நிற்கும் நீர்போல் நிற்கும்.
கருணை நிறைபேச்சினிலே மனிதத்தன்மை
கடலிலெழும் அலைகள்போல் தோன்றுநிற்கும்.
கருணையுளசெய்கையிலே மனிதத்தன்மை
கள்ளொழுகும் மலர்மணம்போல் இணைந்துவாழும்
கருணையிலே கடவுளுளான், ஆதலாலே
கருணையுளோன் உலகில் மனிதன் ஆவான்!

கூர்வாளைக் குரல்வளைமேல் ஒருவன்வைக்கக்
குறுந்தடிகள் பலஓங்கிப்பலபேர் நிற்க
நேர்நிற்கும் மற்றொருவன் நெருப்பிலிட்ட
நீண்ட இருக்கம்பிகளை நீட்ட, பின்னல்
'வார்' ஒன்றைக் கொண்டொருவன் வரிந்துகட்டி
வாட்டுவேன் என்றுரைக்க, ஒளிவேல் ஒன்றை
மார்பினிலே வைக்குநிலை இருந்தாலும் தன்
மானத்தைக்காப்போனே மனிதன் ஆவான்!

மனிதனென்றால் மனம்வேண்டும் மதியும் வேண்டும்!
மற்றவர்தம் நலன்நாடும் நினைவும், செஞ்சொற்
கனிதமிழின் தூய்மைபோல் கருத்தில் தெளிவும்
கனவினிலும் பிறர்க்குஒருத் துன்பம் எண்ணு,
இனிதான உண்மையொளிச் சுடரும் வேண்டும்!
யான் பெற்ற இன்பம் இவ்வுலகத்துள்ள
மனிதகுலம் அத்தனையும் பிறவும் பெற்று
மனம்மகிழ வேண்டுமெனும் எண்ணம் வேண்டும்!

பா. இராசாராம், வெள்ளையங்குப்பம்.
(பழையமாணவர்)

விகடங்கள்

ஸப் இன்ஸ்பெக்டர் :- "கைதி" எங்கேடா?

கான்ஸ்டபிள் :- (மறதியாய்) பாடலி டாக்கீஸில் ஸார்.

ஸப் இன்ஸ்பெக்டர் .- கேடி எங்கேடா

M. ஷர்ப்புடீன் IV Form B.

உட்கார்ந்திருப்பவர்:- என்னப்பா. எவ்வளது நாழியா நின்னுக் கொண்டே பேசுராயே! உட்காருப்பா......

நிற்பவர் :- பரவா இல்லீங்க. வேலே கிடைக்காத இந்த காலத்திலே நின்னுகொண்டே இருக்கப் பழக்கம் பண்ணினு ஒரு கான்ஸ்டேபிள் வேலேக்காவது போகலாம் பாருங்க.........

R. தக்ஷிணமூர்த்தி V Form A.

மனைவி :- "என்னு! இன்னொரு யுத்தம் வந்தாலும் வருமாமே! பேப்பர்லே போட்டிருக்காமே!.........வந்துடுமோ?

கணவன் :- வரலாம்னுதான் தோணுறது. இந்த மாதச் சம்பளத்திலே உனக்கு புடவை எடுக்கச் சாத்தியப் படாது போல இருக்கு!"

R. சையட் கபீர் IV Form B.

ஒருவர் :- கொஞ்ச நாட்களாக எனக்கு சரியாக காது கேட்பது கிடையாது. அதற்கு என்ன செய்யலாம் ஸார்?

மற்றவர் :- ஊம்......ஊம்......ஊம்......ஊம் தாங்கள் என்ன சொன்னீர்கள்.

R. சையட் கபீர் IV Form B.

அம்மா :- ஆராரரோ ஆரிரரோ நீயாரோ நானுரோ. கண்ணுன கண்மணியே கடைந்தெடுத்த பம்பரமே என்னடா சனி யன் தூங்கமாட்டங்கிறதே.

பையன் :- உன்னுடைய பாட்டு நல்லா இருக்குதம்மா. அதனுலே தூக்கம் வரமாட்டிங்குதும்மா.

G. சம்பந்தம் II Form B.

உன்னுடைய மனதில் இருக்கும் இரகசியத்தை ஆத்ம நண்பனிடம் சொல்லிவிட்டு இதை வேறு யாரிடமும் சொல்லி விடாதே என்கிருய்! ஆனல் அந்த இரகசியத்தை வெளியிடாமல் இருக்கும் வலிமை உன் மனத்திற்கே இல்லாதபோது உன் நண்பனுக்கு மட்டும் எப்படி அம் மனவலிவு இருக்கும்.

அமானுல்லாகான், ஆரும் படிவம்.

வக்கீல் :- (தன் கட்சிக்காரனைப் பார்த்து) உன் கணக்கை பிரதிவாதியினிடத்தில் காட்டினுயா?

வாதி :- காட்டினேன் ஐயா.

வக்கீல் :- அதற்கு என்ன சொன்னுன்.

வாதி :- குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள சொன்னுன்.

வக்கீல் :- அதற்கு நீ என்ன செய்தாய்.

வாதி :- அதுதான் தங்களிடத்தில் வந்திருக்கிறேன்.

அமானுல்லாகான், ஆரும் படிவம்.

கருப்பன் நடு இரவில் டாக்டரை அவசரமாக எழுப்பினுன்.

டாக்டர் :- ஏன் தூங்கும்போது தொந்தரவு கொடுக்கிருய்?

கருப்பன் :- ஐயையோ! என் தொண்டையில் எலிக்குஞ்சு புகுந்துவிட்டது.

டாக்டர் :- (தூக்கத்துடன்) அப்படியானல் ஒரு பூனையை விழுங்கிவிடு.

T. ராமலிங்கம், Form IV B.

AN APPEAL.

All old Students of this institution are requested to give their names, full addresses and their year or years of study in this School, to the undersigned, as we wish to prepare a Members' Roll soon. Please inform your friends also.

C. RAMALINGAM,
(Teacher & Old boy)
Local Secretary, Old Students' Association,
St. David's (S. P. G.) High School,
Cuddalore O. T.

தமிழ் இலக்கிய மன்றம்

புனிதவன தாவீது உயர்நிலைப்பள்ளி,
கடலூர் பழயபட்டினம்

புனிதவன தாவீது உயர் நிலைப்பள்ளிக்கூடத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ளது 'தமிழ் இலக்கிய மன்றம்'. இது மாணவரிடையே அன்பு ஒற்றுமை முதலிய நற்குணங்களை நிலை நிறுத்துவதோடு அவர்களிடையே தமிழ் இலக்கிய அறிவை வளரச்செய்வதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது. அது குறித்து திங்கள் தோறும் மன்றத்தின் அங்கமாக ஓர் கூட்டம் கூட்டி பல வகைத் தலைப்புகளில் மாணவர்களைப் பேசச்செய்து வருகின்றது. கூட்டங்கட்குத் தலைமை வகித்தும் பேச்சாளராகியும் அறிவுரை வழங்கும் ஆசிரியப் பெருந்தகையாளரின் தொண்டு ஈண்டு போற்றற் குரித்தாம். இவ்வாண்டில் பல கூட்டங்களின் மூலம் மாணவரிடையே நற்பணியாற்றிய இம் மன்றம் வழக்கப்படி, கட்டுரை, பேச்சு, மனப்பாடம், இசை ஆகியவைகளில் மாணவரிடையே போட்டித்தேர்வுகள் நடத்தி உற்சாகத்தை வளரச்செய்துள்ளது. இவ்வாண்டில் மேற் குறித்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பெயர் முறை பின்வருமாறு.

உயர்படிவம். கீழ்படிவம்.

	FIRST.	SECOND.
ஆறும் படிவம்		
கட்டுரை.	G. செயபாலன்	M. V. இராமசாமி
மனப்பாடம்.	V. திருநாவுக்கரசு	ம. அமானுலாக்கான்
சொற்பொழிவு	K. நடராஜன்	ம. அமானுலாக்கான்
ஐந்தாம் படிவம்		
கட்டுரை	கோ. இராமச்சந்திரன்	சு. இராசமாணிக்கம்
மனப்பாடம்	K. ஸ்ரீராமன்	த. பழனிசாமி
சொற்பொழிவு	K. ஸ்ரீராமன்	M. பாலகிருட்டினன்
நான்காம் படிவம்		
கட்டுரை	S. மணி	P. இராமலிங்கம்
மனப்பாடம்	S. மணி	K. சேதுராமன்
சொற்பொழிவு	M. சர்புதீன்	R. கருணாகரன்

மூன்றும் படிவம்	First	Second
கட்டுரை	L. கணபதி	திரு. R. T. சுசீலா
மனப்பாடம்	K. இந்திரா	,, K. மீராபாய்
இசை	K. மீராபாய்	,, M. S. இந்திராணி
		,, V. பத்துமாவதி
இரண்டாம் படிவம்		
கட்டுரை	R. ஜெகதீசன்	திரு. N. இராஜசேகரன்
மனப்பாடம்	ஜமீனுபாய்	,, ருக்மணி
இசை	N. பிரேமா	,, செல்லம்மா
முதற்படிவம்		
கட்டுரை	N. S. ரவீந்திரன்	திரு. K. சாவித்திரி
மனப்பாடம்	J. சுசீலா	,, A. தக்ஷணு
இசை	குஞ்சிதபாதன்	,, J. சுசீலா

ஹிந்தி போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுள் வெற்றி பெற்றவர்கள்.

மனப்பாடப்போட்டி :—

	FIRST.	SECOND.
இரண்டாம் படிவம்		
	கோ. இராமலிங்கம்	சி. ஜமுனுபாய்
மூன்றும் படிவம்		
	V. T. D. வசந்தகோகிலம்	
		V. பத்மாவதி
		G. சுப்பிரமணியன்

கையெழுத்துப் போட்டி

இரண்டாம் படிவம்		
	E. தியாகராஜன்	V. சகுந்தலா
மூன்றும் படிவம்		
	G. சுப்பிரமணியன்	முத்துக்குமாரசாமி

வீரச் சுவை

தமிழர்களுக்கு வீரம் புதிது அன்று. தமிழ் மக்கள் கொடையையும் வீரத்தையும் அல்லது காதலையும் வீரத்தையுமே இரு கண்களாகக் கருதி வந்தனர். பண்டைய இலக்கியங்களை ஆராய்ந்தால் இலக்கியச் சுவையாகிய ஒன்பது சுவையில் வீரச் சுவையோடு கூடிய இலக்கியங்களை அதிகம் காணலாம். மற்றை அச்சம், இழிப்பு, நகை முதலியவற்றிற்கும் சிறுபான்மையாகக் காணலாம். மேற்கூறிய கொடையாலும் வீரத்தாலும் தம் புகழை நிலைநிறுத்திய வீரர், அரசர், பெண்டிர் பலராவர்.

நலங்கிள்ளி என்ற சோழ மன்னன் பகைவருடன் போர் செய்வதற்கு முன் கூறுகின்ற வஞ்சின மொழியில் 'பகைவராயினும் என் காலில் விழுந்து மிக்க பணிவுடன் என்னை வணங்கிக் கேட்டால், அவர்க்கு எனது அரசாட்சியைக் கொடுக்கத் தவறேன், அவசியம் ஏற்பட்டால் என் இன்னுயிரையும் ஈயத் தவறேன்' என்பது நலங்கிள்ளியின் கொடை வீரத்தையும், "என் ஆற்றலை மதியாது என்னை இழிவாகக் கருதும் ஒருவன் தூங்கும் புலியின்மீது இடறிவிழும் குருடனைப் போல் அழிவதே திண்ணம்" என்பது அவன் வீரத்தையும் தெள்ளித் தெளியக் காண்கிறோமல்லவா!

படை வீரத்தைப் பார்க்குமிடத்து தமிழருடைய போர் முறை, படையின் மாட்சி முதலியவை மேன்மையான நிலையிலிருந்தன எனத் தெரிகிறது. தமிழருடைய படை மாட்சியைக் கூறவந்த வள்ளுவர்

"கூற்றுடன்று, மேல்வரினும், கூடி எதிர் நிற்கும்
ஆற்ற லதுவே படை"—என்று கூறினர்.

மேலும் அவர் "பகைவரை வெகுண்டு நோக்கிய கண் வேல்வருமிடத்து கண்ணை இமைத்து விடுவாரானால் அதுவே அவர்கட்கு தோல்வி" என்று கூறும் வள்ளுவர் வீரமொழிதான் என்னே!

தன்னைத் தாக்க வருகின்ற களிற்றின்மீது தன் கை வேலை எறிந்து அதன் உயிரைப் போக்கி, மேலும் தன் மீது வரும் களிற்றினை எறிதற்கு வேல் நாடித் திரியும் வீரனொருவன்,

தன் மார்பிலே தைத்து குருதி மடை திறந்து ஓடும்படிச் செய்கின்ற வேலைக் கண்டு, அதனைப் பறித்துக்கொண்டு மகிழுகின்றனும்! தமிழருடைய ஆண்மையைப் பாருங்கள்!

தமிழ்ப் பெண்டிர்மட்டும் வீரத்தில் சளைத்தவரா? இல்லை. புறநானூற்றை உற்று நோக்கினல் பெண்களின் வீரம் நன்கு புலப்படும். வீரமகள் ஒருத்தி முதல்நாள் போரிலும் அதற்கு முன்நாள் போரிலும் தன் கணவனையும், தமையனையும் இறந்தவளாய் நிற்கவும் அன்றும் போர்முரசு ஒலிப்பதைக் கேட்டு தன் குடிக்குரிய ஒரே மகனை அழைத்து தலையில் எண்ணெய் தடவி, வெள்ளாடை உடுத்தி வேலினைக் கையில் கொடுத்து போருக்குப் போ என விடுத்தாள். இத்தகைய புறநானூற்றுக் காட்சிகளைக் காணும்போது நம்முடைய கண்களிலே வீர ஒளி வீச, நரம்புகள் முறுக்கேற பேச்சிலே மறத் தன்மையும் வெளிப்படுகிறது அல்லவா!

தமிழர் இத் தன்மையை மறத் தன்மை உடையராயினும், அறத்துறை வழுவிப்போர் செய்பவரல்லர் என்பது

"மன்னுயிர் காக்கும் அன்புடை வேந்தர்
மறத்துறையிலும் அறமே நிகழும்" என்ற அடிகளால் தெரிகிறது.

செங்குட்டுவனவன் கண்ணகிக்கு சிலை கொணர்தற் பொருட்டு வடதிசைக்கு புறப்படத் துணிந்தபோது வில்லவன் கோதை என்னும் அமைச்சன்

"கங்கைப்பேர் யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்
இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீர் உலகின் முழுவது மில்லை"—எனக் கூறினன்

என்றல் இத்தகைய வீரச் சுவை ததும்பும் பண்டை இலக்கியங்களைப் பயின்று வீரமுடன் அரிய செயல்களைச் செய்து பெருமிதம் எய்துதல் தமிழ் மக்கள் தலையாய கடனகும்.

பா. இராமனுதன், 6-ம் படிவம் 'ஆ' பிரிவு.

தேகப்பயிற்சி

இளமை என்பது புதிது, கெடாதது, நல்லது, ஊக்கம், உணர்வு, அழகு, வீரம், அஞ்சாமை முதலியவற்ருேடு கூடியது. அதனையுடைய இளைஞர்களே நாட்டின் செல்வம். இவர்கள் தான் வருங்கால வாலிபர்கள். இத்துணைச் சிறப்புகள் உடைய இளைஞர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் தேகவன்மையும், மனத் திண்மையும் தரத்தக்க தேகப்பயிற்சியை இளம் பருவத்திலேயே செய்து உங்கள் உடலை உறுதியாக்கி அறிவை விசாலப் படுத்திக் கொள்ள காரணமாய் இருப்பது தேகப் பயிற்சி.

தேகப்பயிற்சி உடலுறுதியையும், ஆரோக்கியத்தையும், மனோ சக்தியையும் அதிகரிக்கச் செய்து வெளி அவையவங்களை யும், உள்ளுறுப்புகளையும் உரப்படுத்துகின்றன. உடலின்கண் உள்ள சகல அவையவங்களும் சலிக்கும்படி வேலை கொடுக்கா விட்டால் தேகத்தில் சோம்பல் உண்டாகிறது. துலக்காத ஆயுதங்களும் பலநாள் உபயோகிக்காத இயந்திரம் முதலியவை களும் துரு பிடித்து கெட்டுப்போவதுபோல், செயல்களில் பயிற்சி இல்லாத அவையவங்களோடு கூடிய உடலும் பற்பல நோய்களாகிய துரு பிடித்துப் பாழாகின்றது நன்ருகத் துலக்கி உபயோகிக்கும் ஆயுதங்களும் நீண்டகாலம் பயனுடைத்தாய் நன்மையளிப்பதுபோல், தேகப் பயிற்சியால் உடல் திண்மை யடைந்து நீண்டநாள் வாழ்க்கை இன்பத்தை, அனுபவிக்கவும் உதவும் என்பது நிச்சயம். படிப்பில்லாதவர்கள் மட்டுமே உழைக்கவேண்டும், படித்தவர்கள் உழைக்கவேண்டியதில்லை, பேனாவைப் பிடித்து எழுதிக்கொண்டிருந்தால் மட்டுமே போதும், அதுதான் நாகரீகம் என்று கருதுகிருர்கள். அறியும் பணமில்லாத ஏழைகள்தான் நடந்துசெல்லவேண்டும், தன வந்தர்கள் நடந்துசெல்வதென்ருல் அகௌரவம் என்றெண்ணி பெரும்பாலும் மலம் கழிப்பதற்குக்கூட வண்டியிலேறி செல் கிருர்கள். தமது நண்பர்கள் யாரேனும் நடந்துசெல்வார்களே யானுல் அவர்களைப் பார்த்து என்னசார் ஒரு வண்டிகூட கிடைக்கவில்லையா, என்று கேலி செய்கிருர்கள்.



OBSTACLE RACE

CONNEMARA PUBLIC LIBRARY
JUN 1955
MADRAS



CHAMPIONS



CITIZENSHIP — BOATING

LIBRARY
MADRAS



VOLUNTEERS ON SPORTS DAY

அறிவுவளர்ச்சியும், உடற் பயிற்சியும் வளர்தற்பொருட்டு இளைஞர்கள் சுற்றுப் பிரயாணம் செய்தல் வேண்டும் அடை காக்கும் கோழியைப்போல் வீட்டிற்குள்ளேயே இருந்தால் உல கநிலை தெரியாது. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்ற படி இளமை பருவத்தில் மக்கட்கு எதில் அதிக பழக்கம் ஏற் படுகின்றதோ அதுதான் அவர்கள் ஆயுள் பரியந்தம் இருக்கும். இவ் வுடலைச் சரியான நிலைமையில் வைத்திருப்பதற்கு நாம் சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு முதலியவைகளைக் கவ னிப்பது முக்கியமாகும். உண்ணும் உணவு அஜீரணப்பட்டால் அநேக வியாதிகளுக்கு இடமாகின்றன. இக் குறைகளைப் போக்குவதற்குத் தேகப்பயிற்சியே முக்கியமானது.

தேகப் பயிற்சியினால் நாம் உட்கொள்ளும் ஆகாரம் கடின மாய் இருந்தாலும் ஜீரணமாகி இரத்த ஓட்டத்தை அதிகப் படுத்தி, எழுவகை தாதுக்களையும் பலப்படுத்தி, மனோதிடத் தையும், ஊக்கத்தையும் கொடுக்கின்றன. இந்தியர்கள் தேக வன்மையற்றவர்கள், பயங்கொள்ளிகள், வீரமில்லாதவர்கள் உறுதியும், ஊக்கமும் இல்லாதவர்கள் என்றும் கூறும் இக் கொடிய பழிச்சொல் நீங்கவேண்டுமாயின் ஒவ்வொருவரும் தேகப் பயிற்சியைச் செய்யவேண்டும். தேகப் பயிற்சியானது உடலிற்குச் சக்தியைக் கொடுக்கிறது. ஒவ்வொரு உறுப்பும் சுறுசுறுப்பாக வேலை செய்யும்படித் தூண்டுகிறது. தேகப் பயிற்சி செய்கையில் இரத்தமானது தாராளமாக உடலெங்கும் பரவி, உடலுக்கு ஊக்கத்தை கொடுக்கிறது.

ஆரோக்கியமே ஐஸ்வரியம் என்பதை உணராத சிலர் உடல் நலனை கவனியாது பொருளீட்டுவதிலேயே தமது வாழ்நாளைக் கழிக்கின்றனர். நாம் வசிக்கும் வீடுகள் நீடித்து இருக்க வேண்டுமானால், அவற்றை நல்ல சுண்ணாம்பாலும், சுட்ட செங் கற்களாலும், உறுதியுள்ள மரங்களாலும் கட்டவேண்டும். அதுபோல நம் உடம்பு வெகுகாலம்வரை நீடித்து இருப்ப தற்கு தேகப்பயிற்சி செய்யவேண்டும். ஒரு மாளிகையை ஒரு வருடம் பூட்டிவைத்துப்பார்த்தால் மிகுந்த தூசியும், கூரைகளி லும் மற்றெல்லா இடங்களிலும் அசுத்தம் நிறைந்திருக்கிறதைப் பார்க்கிறோம். எனவே ஆரோக்கிய மார்க்கங்களையும் உடற் பயிற்சியையும், கைக்கொள்ள வேண்டும் அங்ஙனம் கொள்

ளாத வனுடைய உடலானது பலவித அசுத்த நீர்களால் நிறைக்கப்பட்டு இரத்தமானது நஞ்சாகமாறி நோயால் பாதிக்கப்படுவான். பயிற்சி பொதுவாக ஆண், பெண், பாலர் முதலிய யாவரும் செய்யவேண்டும். தேகப்பயிற்சி செய்யும்போது கோபம் முதலிய தீயகுணங்களின்றி மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டும்.

தேகப்பயிற்சி செய்யாதவர்கள் ஆரம்பத்தில் கடினமான பயிற்சியைச் செய்யக்கூடாது. நமது நாட்டுமக்கள், குழிந்த கண்ணும், வளைந்த முதுகும், சரிந்த தோலும் உடையவர்களாய் இருக்கின்றனர், இதற்குக் காரணம் தேகப்பயிற்சிஇன்மையே.

தேகப்பயிற்சி செய்வதற்குமுன் சில விதிகளை அனுஷ்டிக்க வேண்டும். 1. விடியற்காலம் ஐந்து மணிக்கு எழுந்திருக்க வேண்டும். 2. மலஜலம் கழிப்பதற்குமுன் ஒரு டம்ளர் ஜலம் குடிக்க வேண்டும்.

3. பரிசுத்தமான காற்று வீசக்கூடிய இடத்தில் தேகப் பயிற்சி செய்ய வேண்டும்.

4. வியர்வை ஒழுகும்வரை பயிற்சி செய்யவேண்டும். 5. புசிக்கும் உணவில் தவிடு தீட்டாத புழுங்கலரிசிச் சாதம், காய்கறி வகைகள், கீரைவகைகள் சாப்பிடவேண்டும். 6. மாலை 4-30 மணிக்கு சிற்றுண்டி உண்டு நன்னாறி முதலிய சம்பந்தப்பட்ட பானங்களைப் பருகவேண்டும்.

7. சாயந்திரம் பயிற்சி செய்யலாம். 7½ மணிக்கு மத்தியானம் சாப்பாட்டைவிட சிறிதளவு குறைத்து உட்கொள்ள வேண்டும். 9½ மணிக்கு நித்திரை செய்யவேண்டும். ஒவ்வொருவரும் தேகப்பயிற்சி செய்யத் தக்ககாலம் அதிகாலையே. அதிற்செய்ய இயலாதவர்கள் மாலையில் செய்யலாம்.

ஆகையால் ஒவ்வொரு மாணவனும் தேகப் பயிற்சி செய்ய வேண்டும். செய்தால்தான் நாட்டின் வருங்கால வாலிபர்களாக முடியும். ஆரோக்கியமாக வாழலாம்.

V. இராமலிங்கம்
5-ம் படிவம் 'ஆ' பிரிவு

2 - JUN 1955 ... LIBRARY ... RAS

பேரறிஞர்கள்

"ஏன் நாம் எஸ். பி. ஜி. உயர்நிலைப் பள்ளி ஆண்டு மலருக்குக் கட்டுரை எழுதி அனுப்பக்கூடாது" என்று பேசிக் கொண்டே சாரதா தன் கையில் வைத்திருந்த பார்க்கர் பேனாவைத் தன் தோழி இரேவதிக்குப் பக்கத்திலிருந்த மேஜையின்மேல் வைத்தாள். ஆண்டு மலருக்குப் பேரறிஞர்களுடைய வாழ்க்கையையும் அவர்கள் மக்களுக்குச் செய்த தொண்டுகளையும் பற்றிச் சிறு கட்டுரைகள் வரவேற்கப்பட்டன. இதைக் கேள்வியுற்றே இரேவதி சாரதாவின் வேண்டுகோட்படி ஒரு கட்டுரை எழுதியனுப்ப ஒப்புக்கொண்டாள். சில திங்கள் கடந்தபின் ஒருநாள் வழக்கம்போல் வகுப்பு அறையில் வாசித்துக்கொண்டிருக்கும்போது தலைமை உபாத்தியாயர் ஒரு எஸ். பி. ஜி. உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலரினைக் கொண்டுவந்து கொடுத்தார். அதில் "நான் கண்ட பேரறிவாளிகள்" என்ற தலைப்புடன் ஒரு கட்டுரையும் அடியில் இரேவதி என்ற பெயரும் வரையப்பட்டிருந்தன. அதோ! அந்த உலகப் பேரறிவாளிகள் அதில் உலவுகின்றனர்.

மனிதன் பிறப்பது வளர்ச்சியுற்ற உடலோடுதானே தவிர உருவுற்ற திண்மைப் பண்புகளோடு அல்ல. பண்புகள் அவன் வாழ்வில் வளர்க்கப்படுகின்றன. அவன் வளர்க்கும் பண்புகள் அவன்வாழ்வில் வளமுண்டாக்குவதோடன்றி அவன் நாட்டவர் வாழ்விலும் நலமும், வளமும் பூக்கச் செய்கின்றன. பண்புகள் அவன் அறிவை கூர்மைப்படுத்தும். அறிவின் உயர்வால் அவன் உயருகிறான்.

உலகில் பல வேறுபாடுகள் நிலவினும் பண்பால் பயனும் அறிவால் உயர்ந்த உத்தமர்கள், பேரறிஞர்கள் பலர் அவர்களின் எண்ணக் குவியல்கள் அவர்களுக்குத் துன்ப முடிவையே ஈந்திடினும் இணையற்ற இன்பத்திற்கு மக்களை, இழுத்துச் சென்ற பெருமை அவர்தம்பாற் பட்டதே.

நாடு, மதம், தகுதி—இன்னுமென்ன வேறுபாடுகள் இவைகளைத் தடுத்ததில்லை.

நாம் தெரிந்துகொள்ளவேண்டிய அறிவாளிகள் பலரும் ஒரே இடத்தில் பிறந்து, வளர்ந்து அதே மக்களுடன் பழகிய வர்கள் அல்லர். உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு மூலே முடுக்குகளிலும் வெவ்வேறு மொழி நடை உடை பாவனைக ளுடன் உதித்துத் தங்களது கருத்துக்களை அறிவற்ற மக்க ளுக்கு கணக்கின்றி அன்புடன் வாரி வாரி வழங்கிப் போந் தனர். அவர்கள் வாழ்க்கையில் இன்னல்கள் ஒன்ரு? இரண்டா? அல்ல. பலப்பல! தன்னம்பிக்கைக்கொண்டு தனிப்பட்டு நின்று தனிப்பட்டே செயலாற்றுகிருர்கள். அரசாங்கமோ மக்களோ அடக்குமுறை என்ற கொடிய பாணத்தை அவர்கள்மீது வீசி னும் தாங்கள் எண்ணுவதும், செய்வதும், சரி என்று தயங்கா உள்ளத்தோடும், இரும்பு நெஞ்சத்தோடும் இயம்பியதால் அல்லவோ அவர்கள் எல்லோரும் அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க முடிந்தது. தாம் கொண்ட கொள்கையை எதிர்த்து மடமைக்கு மண்டியிடும் பித்தர்கள் விஷத்தைக் கொடுத்தாலும் தன் தத்துவமாகிய பகுத்தறிவு வருங்கால உலகில் பரவிப் பயன் பெறட்டும் என்று அஞ்ஞான இருளில் உழன்று தத்தளிக்கும் நமக்கு உறுதி ஊட்டி ஆலம்உண்டு உயிர்நீத்தார் ஆனுல் கோகி னூர் வைரத்தைப் போல் அழியாப் புகழுடன் நிலே பெற்ருர் மகான் ஸாக்ரடீஸ்.

அமெரிக்காவில் நியூ ஆர்லியன்ஸ் (New orleans) சந்தை யில் இரக்கம் இல்லாது அடிமைகளை ஏலம்போடும் வர்த்தகர் களை முறியடித்து அவருடைய உழைப்பால் அடிமை வியா பாரத்தை ஒழித்து உள்நாட்டுக் குழப்பத்தை அடக்கி ஒரு யூனி யனுக்குள் அமெரிக்கா நாடு முழுவதையும் கட்டுப்படச்செய்து இரு தடவை அமெரிக்க மக்கள் தலைவராக (President) தேர்ந் தெடுக்கப்பட்டு உலக சிரேட்டரில் ஒருவராக உயர்ந்து புகழ் பெற்ற மக்களின் மாணிக்கமாகிய லிங்கன் பிறந்தார்.

பேச்சில் நம்பிக்கை கொள்ளாதீர் செயலில்தான் நம்பிக்கை யிருக்கிறது" என்று பாராளு மன்றம் (Parliament) கூட்டிப் பேசிக்கொண்டிருப்பதால் பயன் இல்லை. இரும்பாலும், இரத்தத்தாலுமே ஜெர்மெனியை மேன்மேலும் மேன்மை யடையச் செய்யமுடியும் என்று கூறி ஜெர்மெனியைத் தலை சிறந்த நாடாக்கிய மூல புருஷரும் இராஜ தந்திரியில் தலை சிறந்தவருமாகிய பிஸ் மார்க் மறைந்தார்.

போஸ்டன் நகரிலே ஏழ்மைக்குடும்பத்தில் பிறந்து ஏழ்மையுடன் தோழ்மை கொண்டு வளர்ந்து இன்றைய மக்கள் உலகத்துக்கு கிராமபோன், படக்காட்சி, இவைகளைக் கண்டுபிடித்து மின்சாரத்தின் தன்மையையும் அதைக் கொண்டு இயங்கும் விசிறியையும், அடைகாக்க கோழியில்லாமல் குஞ்சு பொரிக்கும் விதத்தையும் நாட்டிற்கு நல்கிய நல்லவர் சாஸ்திர விற்பன்னர்களில் தலைசிறந்த எடிசன் மறைந்தார்.

கண்ணில்லாக் குருடராக இருந்து தேன் சொட்டும் அரும் பெரும் அருவியென மதுரப்பாக்களைத் தசை சுருங்கி வாடித் தளர்வுற்ற காலத்திலும் ஒப்பற்ற கருத்துக்களுடன் பாடி மறைந்தார் கவியரசர் மில்டன். அவர் தந்த "இழந்த சுவர்க்கம்" நம்மில் கவிதைச் சுவர்க்கத்தையன்றோ எழுப்பி இருக்கிறது.

பேரறிஞர்களாக வாழ்ந்தவர் பலர் என்பது மட்டுமல்ல, எந்நாட்டவர்க்கும் பொதுவான உலகத்தவரின் பொதுச் சொத்தான இவர்களின் கருத்துக்கள் நம் வாழ்வில் துணையாய் அமைந்தன. வாழ்ந்தவர் பரம்பரை இப்போது வாழும் பரம்பரையாகவும் உள்ளது. வாழ்க அவர்தம் பொன் அனைய புகழ்க் கருத்துக்கள். இக் கேடுறு உலகம், கவின் உறு. கருத்துக்களோடு வெளிவரும் பேரறிவாளர்களை வதைக்காதிருக்குமாக!

T. ஜலீல், ஆறும் படிவம் 'ஆ' பிரிவு.

PHONE: 80 TEL: "NATARAJA"

சிறந்த சிற்றுண்டி ! உயர்த்த உணவு !! குளிர்ந்த பானங்கள் !!!

★

தங்குவதற்கு தகுந்த காற்றோட்டமான அறைகள்
யாவருக்கும் ஆனந்தம் அளிப்பது

★

ஸ்ரீ ஆனந்த நடராஜா லஞ்சு ஹோம்

காபி & சாப்பாடு ஹோட்டல்	போர்டிங் & லாட்ஜிங்
கூடலூர் O. T.	திருப்பாதிரிப்புலியூர்.

★ ★

(பஸ் ஸ்டாண்டுக்கும், ரயில்வே ஸ்டேஷனுக்கும் அருகாமையிலும் பஜார் மத்தியிலும் அமைந்துள்ளது)

★

Proprietors :

V. V. NARAYANASAMY IYER V. V. SASHAMANI IYER

எங்கள் ஊர்

இயற்கை அமைப்பு

எங்கள் ஊர் ஒரு சிறு கிராமம். அங்கே சுமார் 300 வீடுகள் இருக்கின்றன. அதில் பல தொழிலாளிகளும் குடியானவர்களும் வசிக்கின்றனர். ஊரைச்சுற்றிலும் வயல்களும் தோப்புகளும் சூழ்ந்திருக்கின்றன. ஊருக்கருகிலும், வயல்களுக்கிடையிலும் ஒரு சிறிய நீரோடையிருக்கின்றது. நீரோடையிலுள்ள ஊற்றுத் தண்ணீர் பார்ப்பதற்கு அது இளநீரென்றெண்ணி ஏமாற்றமடையும்படிச்செய்கின்ற தன்மை பொருந்திய சுத்தமான நன்னீராயிருக்கும். ஊருக்கு மத்தியில் ஒரு குளமும், குளத்தைச் சுற்றிலும் அனேக ஆலமரங்களும் இருக்கின்றன. எங்கள் ஊரிலிருந்து நகரங்களுக்குச் செல்லுவதற்கு வசதியான ரஸ்தாக்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

கல்வி.

எங்கள் ஊரில் ஒரு போர்டு ஆரம்ப பாடசாலையிருக்கின்றது. அவற்றில் இரண்டு ஆசிரியர்கள் உண்டு. அப்பள்ளியில் ஆண்களும் பெண்களும் வாசிக்கின்றனர். அப்பள்ளியின் இறுதித்தேர்வில் தேரியபிறகு பெரும்பாலோர் தங்கள் பிள்ளைகளுக்குத் தொழிற் கல்வி பயிற்றுவிக்க ஆரம்பிப்பார்கள். ஒரு சிலர் தங்கள் பிள்ளைகளை உயர்தரப்பள்ளிக்கு அனுப்பி கல்வி பயிலச்செய்வார்கள். இளமையில் கல்லாத முதியோர்களுக்கு இரவில் கல்வி கற்பிப்பதற்கு ஓர் இலவச இராப்பாடசாலையும் இருக்கிறது. அங்கே, படிப்பே இல்லாத சிலமக்களும் உண்டு. ஆயினும் அவர்கள் படித்தவர்களிடம் சென்று நற்பயன்தரும் விடயங்களைத் தமது செவியின்மூலம் ஏற்று அறிவை வளர்க்கும் திறமையுள்ளவர்களாயிருக்கின்றனர். பண்டைக்காலத்திலுள்ள கிராமவாசிகள், உலக அறிவு அரசியல் விடயம் முதலியவைகளைப்பற்றி ஒன்றும் அறிய இயலாதவர்களா யிருந்தாலும் தற்காலத்திலுள்ள கிராம மக்கள், உலக அறிவு, அரசியல் விடயம், கட்சி இயக்கம் முதலிய முற்போக்குகளில் ஓரளவு அறியும் ஆற்றலுள்ளவர்களாகவே வருகின்றனர்.

எங்கள் ஊரில் வீதிகள் விசாலமாகவும் காற்றோட்டமுள்ளதாகவும், வீடுகள் தனித்தனியாகவும், வீட்டைச்சுற்றி

லும் இடைவெளிகளுமுள்ளதாக இருக்கும். தெருக்
சுகாதாரம் களில் குப்பை கூளம் முதலிய அசுத்தங்கள் ஏற்படாவண்ணம் கிராம பஞ்சாயத்து போர்டு மேற்பார்வையிட்டு வருகின்றது. கால்நடைகள் தண்ணீர் குடிப்பதற்கும், மக்கள் கை கால்கள் சுத்தம் செய்துகொள்வதற்கும் ஏற்றபடி குளம் அமைந்திருக்கிறது மாலை நேரத்தில் உலாவிவருவதற்கும் அனேக பறவைக்கூட்டங்களின் கானங்களைக்கேட்டு களிப்பதற்கும் நல்ல காற்றைப் பெறுவதற்கும் ஏற்றபடி குளத்தைச் சுற்றிலுமுள்ள மரங்கள் பயன்படுகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் பெரும்பாலும் ஒவ்வொரு கிணறுகளிருக்கின்றன. இக்கிணறுகள் மிகவும் ஆழமாயிருப்பதால் விஞ்ஞான ஆராச்சியாளரின் கொள்கைப்பிரகாரம் கிருமிகள் தண்ணீரில் உண்டாவதற்கு வசதியில்லாமலிருப்பதால் இக்கிணறுகளிலிருந்து கிடைக்கும் தண்ணீர், குடிதண்ணீருக்கும் குளிப்பதற்கும் ஏற்றவையாய் அமைந்துள்ளது. ஆடைகளை வெளுப்பதற்கு நீரோடை மிகவும் பயனுள்ளதாயிருக்கிறது. இந்த நீர் எப்பொழுதும் ஓடிக்கொண்டேயிருப்பதால் வெளுக்கும் ஆடைகளிலுள்ள அசுத்தம் அடிக்கடி வெளியேறிக் கொண்டே யிருக்கின்றன. சூரிய உதயத்துக்குப் பின் வயல் வெளிகளுக்குச் சென்று பார்த்தால் பச்சைப்பசேலென்று காட்சியளிக்கும் பயிர்களின் காட்சி, நமது உள்ளத்தில் ஆற்றொணாத உவப்பை விளைவிக்கும். காடுகளுக்குச் சென்று பார்த்தால் அங்கு முட்செடிகளிலுள்ள பழங்களும் செங்காய்களும் அழகிய பவழங்கள் போன்ற காட்சியளிக்கும். வெய்யிற் காலங்களில் நிழல் தருவதற்கும் நல்ல காற்றைத் தருவதற்கும் சாலைகளும் தோப்புகளும் பயன்படுகின்றன. அன்றியும் அம்மரங்களிலிருந்து கிடைக்கும் காய்களும் கனிகளும் உணவோடு பயன்படுகின்றன. மேலும் கிராம மக்கள் வெய்யிலில் வேலை செய்யவேண்டியிருப்பதால் அவர்கள் வேலை செய்யும்பொழுது அவர்களுடைய உடலிலுள்ள கழிவு நீர்களெல்லாம் தோலின் வழியாக வியர்வையாக வெளியே வந்துவிடுவதால் அம்மக்கள் நோயின்றி பலசாலியாயிருக்கின்றனர்.

எங்கள் ஊரில் உழவுத்தொழில், நெசவுத்தொழில், வீடு கட்டும்தொழில், தச்சத்தொழில், மரம்வெட்டும்தொழில், வாள்

கைத்தொழில்

கொண்டு மரப்பலகையறுக்கும் தொழில், களஞ்சியம் செய்தல், மிதியடி செய்தல், இரும்புகளினாலான கருவிகள் செய்தல், மட்பாண்டம் செய்தல், பருத்தியிலுள்ள பஞ்சிலிருந்து தக்ளி அல்லது ராட்டை கொண்டு நூல் நூற்றல், கால்நடைகள் வளர்த்தல், ஆபரணம் செய்தல், வெண்கலப் பாத்திரம் செய்தல், கீற்று முடைதல், பாய்பின்னுதல், கூடைகட்டுதல், தட்டிபின்னுதல், முதலிய பல கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. இவற்றுள் முக்கியமாகப் பயிர்த்தொழில் செய்பவர்கள் மிகுதியாயிருக்கின்றனர். அவர்கள் நிலத்துக்கேற்றபடி உரம் இடுதல், விதைத்தல், நடுதல் முதலியன செய்வார்கள். அதாவது மணற்பாங்கான வயல்களில் கம்பு, தினை, மணிலாகொட்டை, வரகு, துவரை, உளுந்து, கொள்ளு, எள், கிழங்கு, பயறு, ஆமணக்கு முதலியவைகளையும் செம்மண் நிலங்களில் கேழ்வரகு (ராகி), துவரை, உளுந்து, கொள், எள், பயிறு, தொவரை, சாமை, தினை முதலிய புன்செய்ப் பயிர்களையும், நீர்வளமுற்ற பள்ளத் தாக்குகளிலுள்ள களிப்பு மண்ணமைந்த வயல்களில் நெல், கரும்பு போன்ற நன்செய்ப் பயிர்களும் செய்கின்றனர். பயிர்த் தொழிலில், தோட்டப் பயிர் என்ற ஒரு வகையும் உண்டு. கிணற்றிலிருந்து ஏற்றம் அல்லது கபிலைகளின் மூலம் தண்ணீர் பாய்ச்சி பதார்த்தங்களுக்குறிய காய்கறிகளும், கிழங்கு வகைகளும். புகையிலை போன்ற லாகிரி வஸ்துக்களும் உற்பத்தி செய்கின்றனர். மழைக் காலங்களில் குடியானவர்கள் ஓய்வு நேரங்களில் கூடை பின்னுதல், தடுக்குப் பின்னுதல், சம்பங்கூடு பின்னுதல் முதலிய தொழில்கள் நடத்துவார்கள். பயிர்கள் அறுவடை செய்தபின் கோடை காலங்களில் குடியானவர்கள் சிறிய பனை மட்டைகளால் விசிறி பின்னுதல் நூல் நூற்றல், இலை தைத்தல் முதலிய பணிகள் செய்து சிறுசிறு ஊதியம் பெறுவர்.

வாணிபம்

எங்கள் ஊரில் வாரத்துக்கொருமுறை சந்தை கூடும். பல ஊர்களிலுள்ள பொருள்களும், எங்கள் ஊரிலுள்ள பொருள்களும் அங்கு விற்கப்படும். சுற்றுப்புறக் கிராமவாசிகள் தம்முடைய பொருள்களை அங்கு வந்து விற்றபின், தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொண்டு செல்வார்கள். குடியானவர்கள் வயல்களி

களிலும் தோட்டங்களிலும் அறுவடை செய்த பொருள்களைத் தங்களுக்கு வேண்டியவற்றை வைத்துக்கொண்டு, சந்தையில் விற்றது போக எஞ்சியவற்றை அருகிலுள்ள நகரங்களுக்கு எடுத்துச்சென்று வியாபாரம் செய்து கிடைக்கும் லாபத்தை ஊதியமாகப் பெறுவர்.

கிராம வாழ்க்கை மிகவும் தூய்மையானது. ஆரோக்கிய மானது தன்னலமற்றது. பரோபகாரமுடையது. ஒரு குடியானவனின்பண்டம் களத்தில் காயும்பொழுது வாழ்க்கை திடீரென்று மழை வந்துவிட்டால், அப்பொருள் மழையில் நனையாமலும் தண்ணீரில் அடித்துக் கொண்டு போகாமலும் இருப்பதற்கான ஏற்பாட்டை அருகிலுள்ள மக்கள் செய்து உதவுவார்கள். திடீரென்று ஓர் வீடுதீப்பற்றிக் கொண்டால் உடனே ஊரில் உள்ள அத்தனை மக்களும் திரண்டு எழுந்து வந்து ஒன்று சேர்ந்து அத்தீயை யணைக்க காப்பாற்றுவதற்கு முற்படுவார்கள் இவ்விதமான ஒற்றுமையினால் பகைவர்களை வெல்லலாம். நினைத்த காரியங்களைச் செய்து முடிக்கலாம். ஊரில் ஏதாவது வம்பு வழக்கு நடந்தால் அவற்றை உடனே விசாரித்துத் தண்டிப்பதற்குப் பஞ்சாயத்துச் சபை அமைந்திருக்கிறது. கிராமத்திலுள்ள உழைப்பாளிகள் பலபேர் கைமாறி உயர்ந்த விலைக்கு விற்கும் உணவுப் பொருள்களை வாங்காமல் ஒவ்வொரு தொழிலாளிகளும் தம்தம் வீட்டிலிருந்துக்கொண்டு பெறும் உணவுப் பொருளையே உண்ணலாம். உதாரணமாகக் குடியானவர்களுக்குக் கருமான் கலப்பை, களைக்கொத்தி, மண்வெட்டி முதலிய கருவிகளைச் செய்து கொடுக்கிறான். வண்ணான் சலவை செய்து தருகிறான். நாவிதன் தலையலங்காரம் செய்கிறான். செம்மான் மிதியடி செய்து தருகிறான். இதுபோன்று இன்னும் பற்பல தொழிலாளிகளும்குடியானவர்களுக்குத் தம்மாலான பணியைச்செய்து உடனுக்குடன் கூலியைப் பெறாமல், அறுவடை காலங்களில் அவரவர்களின் ஊதியத்துக்கேற்ற அளவு உணவுப் பொருள்களைக் குடியானவர்களிடமிருந்து பெறுகின்றனர். இதனால் தொழிலாளிகளுக்குமட்டும் நன்மை உண்டாவதோடல்லாமல், குடியானவர்களுக்கும் நன்மையுண்டாகிறது. எப்படியென்றால் குடியானவன் தனக்கு ஏதாவது ஒரு கருவி தேவையாயிருந்தால், தந்தையானவர் தனையனையழைத்து வேலையிடுவதைப்போல்

தொழிலாளிகளிடம் சென்றுத் தனக்கு வேண்டிய கருவியைப் பெருகின்றனர். தாம் வயோதிகராகும்போது தமது சொத்து, பொருள்கள் முதலியவற்றை தம் மைந்தர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதுபோல, பயிர் அறுவடையாகும்போது ஒவ்வொரு தொழிலாளிகளுக்கும் குறித்த விகிதத்தில் பொருள்களைப் பங்கிட்டுக் கொடுப்பது, ஒரு குடும்பத்தில் வாழ்க்கை நடக்கும் சம்பவத்தை யொட்டியிருக்கின்றன. இந் நிகழ்ச்சிகளெல்லாம், நாம் நம்முடைய ஒவ்வொரு அவையவங்களினுலும் ஒவ்வொரு பணியையியற்றி கிடைக்கும் ஊதியத்திஞல் உணவு சேமித்து உட்கொண்டு நம்முடைய ஒவ்வொரு அவையவங்களையும் வளர்க்கிருேம். அதுபோல கிராமத்திலுள்ள மக்களனைவரும் பற்பலவிதமான தொழிலைக் குடியானவர்களுக்குச் செய்து பிறகு அக் குடியானவனிடமிருந்து உணவுப்பொருளைப் பெற்று குடும்பம் நடத்துகிருர்கள். அன்றியும் அதிக செலவு செய்யாமல் எளிமையாயும், சிக்கனமான வாழ்க்கையையும் நடத்துகிருர்கள். மேலும் பகற்காலத்து நல்ல உழைப்பு உழைக்கும் மக்கள் தங்களையும் மற்றவர்களையும் உற்சாகப்படுத்தி மகிட்சியடையச் செய்வதற்கு இராக் காலங்களில் சிற்சில நாடகங்கள் நடிப்பதற்கு பயிற்சிபெற்று பிறகு ஓர் இரவில் வீதிகளில் நாடகம் நடித்து கேளிக்கை செய்வார்கள். அக் கேளிக்கையின் மூலம் கிடைக்கும் சிற்சில விடயங்களை மக்கள்மனதில் வைத்து அதன்படி நடப்பதற்கு முயற்சி செய்வார்கள்.

கடவுள் பக்தி

மனித வாழ்வுக்குரிய நலங்கள் யாவற்றையும் தந்த இறைவனை வழிபடுதல் வேண்டும். இதற்கென்று எங்கள் ஊரில் சிற்சில கோவில்கள் உள்ளன. பகல் முழுதும் வயலில் உழைத்துவிட்டு மாலையில் வீட்டிற்கு வந்து தீர்த்தமாடிவிட்டு அவரவர் வழிபடும் கோவில்களுக்குச் சென்று கடவுள் வழிபாடு செய்வதுண்டு. வருஷத்துக்கொருமுறை உற்சவங்கள் நடத்தி இராக் காலங்களில் நாடக சபையார்களால் கேளிக்கைகள் நடைபெறச் செய்து மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிருர்கள். இயற்கை காட்சிகளில் சிறந்த ஊர் எதுவென்ருல்? எங்கள் ஊர். கல்வி, சுகாதாரம், கைத்தொழில், வாணிபம், நல்வாழ்க்கை, ஒற்றுமை முதலியவைகளில் சிறந்துவிளங்கும் ஊர் எது என்ருல், எங்கள்

ஊர் என்று காண்பவரெல்லாம் எண்ணுவதற்கேற்றபடி நாம் ஒவ்வொருவரும் நமது நாட்டில் அடங்கியுள்ள ஒவ்வொரு சிறு ஊர்களிலும் உள்ள மக்களை கல்வியிலும், ஒற்றுமையிலும், முன்னேறும்படிச் செய்வதற்கு முயலவேண்டும். முயற்சி செய்து பலன் கிடைக்கவேண்டுமென்று இறைவனை நண்ணி வழிபாடு செய்து அருள்பெறுவோமாக.

K. வேணுகோபால்,
மூன்றாம் படிவம் ‘ஆ’ பிரிவு.

எங்கள் கடையில் பாடசாலை மாணவர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான நோட்டுகளும், ஸ்டேஷனரி தினுசுகளும், சோப்புகள், பாட்டரிகள், விளையாட்டு சாமான்கள் முதலியன மலிவான விலையில் கிடையில்.

SNS HANDICRAFTER

- மேலும் சிறந்த முறையில் உயர்ந்தரக சட்டங்களினால் படங்களுக்குச் சட்டம் கண்ணாடி முதலியவை போட்டு கொடுக்கப்படும். சட்டங்கள் மொத்தமாகவும் கிடைக்கும்
- கோட், சேர்ட், ஜாக்கட் முதலியவற்றிற்கு கலர் துணிகளில் உடனுக்குடன் மொத்தமாகவும் சில்லரையாகவும் பட்டன்கள் தயாரித்துக் கொடுக்கப்படும்.
- மற்றும் எங்கள் கடையில் பலவிதமான கைத்தொழில் வேலைகளும். ரிப்பேர் வேலைகளும் செய்யப்படும்.
- ஒருமுறை எங்கள் கடைக்கு விஜயம் செய்யவும்.

கைத்தொழிலாளர்,
எஸ். என். சேர்க்கான்,
55, காசுக்கடை வீதி, கூடலூர் ப. ப.

திருத்துங்கள்.

சிலர் நம் செந்தமிழ் நாட்டினர் தம் பண்பாட்டை, உயர்ந்த கொள்கையை, உயர்ந்த குறிக்கோளை, வெளிப்படுத்தும் சில பழமொழிகளை தவருன கருத்தில் சொல்லி வருகின்ருர்கள். அங்ஙனம் வழங்குவதால் செந்தமிழ் நாட்டினர்க்கே பேரிழுக்கு உண்டாகிறது.

முதலாவதாக 'ஆயிரம்பேரைக் கொன்றவன் அறைவயித்தியன்' என்ற பழமொழியைப் பார்ப்போம். இதன் பொருள் ஆயிரம்மக்களைக்கொன்றவன்தான் அரை வயித்தியனும். அதாவது மருந்து கொடுத்து ஆயிரம் பேரைக் கொன்றவன்தான் அரை வயித்தியன் என்று விளக்கம்வேறு கூறுகிருர்கள். அம்முறையில் தற்காலத்தில் எவனுவது வயித்தியனுக இருப்பானுனல் உடனே அவன் மக்களால் பரலோகம் அனுப்பப்படுவான். ஆனுல் அதற்கு என்னதான் பொருள்? காண்போம்.

தமிழ்நாட்டில் மலைகளை அடுத்தும் அருவிகளை அடுத்தும் ஆயிரக்கணக்கான நல்ல மூலிகைகளும் மருந்து மரங்களும் செடி கொடிகளும் இருந்தமையால் அவற்றின் உபயோகத்தைப் பற்றி அறிந்து கொண்டாலே எல்லா வயித்தியங்களும் செய்து விடலாம் என்ற நோக்கம் கொண்டு "ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வயித்தியன்" எனும் பழமொழி ஏற்பட்டது என ஆராய்ந்து பார்க்குமிடத்து புலப்படுகிறதல்லவா! இதனைத்தான் ஆயிரம் பேரைக்கொன்றவன் அரை வயித்தியன் எனத்திரித்து வழங்கலாயினர். தேரையர் என்ற பெரியார் முசுமுசுக்கை என்பதைக் கொண்டு மருந்து செய்து குறிப்பிட்ட ஒரு நோய்க்குக் கொடுக்க வேண்டும் எனக் கூறினுர் என்ருல் சிலர் முசு என்ருல் குரங்கு என்று பொருளாயிற்றே. குரங்குகளைப் பிடித்துச் சாகடித்து மருந்து செய்யச் சொல்லியுள்ளார் தேரையர் என எண்ணுகின்றனர். முசுமுசுக்கை-என்பது ஒரு தழை அதைக்கொண்டுதான் மருந்து செய்யச் சொன்னுர். இதனை அறியாது விபரீதமாகக் கொள்கின்றனர். விபரீதமாக பழமொழியை மாற்றிப் பொருள் கொள்கின்றனர் இவர்களைத் திருத்துங்கள்.

மற்ருெரு பழமொழியைப் பார்ப்போம்:— உதைப்பானுக்கு வெளுப்பான் சாதி வண்ணுன்'' என்பதாகும். இதன் உண்மைப்பொருள் சூரிய உதயகாலத்திலே துணிகளை எடுத்துச் சென்று துவைப்பவன் உண்மையான வண்ணூர்குலத்தைச் சார்ந்தவன் என்பதாகும். ஆனுல் பாமரர்களிடம் எப்படிக் கருத்துமாறியதென்ருல் எவன் ஒருவன் கடுமையாக வண்ணுனைத் தண்டிக்கிருனே அவனிடமே வண்ணுன் சரியாக நடந்து கொள்வான் என இங்ஙனம் மாறிவிட்டது. நாளடைவில் ஒவ்வொரு பழமொழியும் மாறிக்கொண்டே போனுல் என்ன ஆவது? காலம் மாறிக்கொண்டே வரும் இக்காலத்தில் அதாவது தொழில் செய்யுங்காரணத்தால் தாழ்ந்தவன் உயர்ந்தவன் எனக் கருதக்கூடாது என்கிற இந்தநேரத்தில் இப்பழமொழியைக்கொண்டு தொழிலாளிகளைத் தண்டிக்கப் போவோமானுல் நம் கதி என்னுவது என்று எண்ணிப்பாருங்கள்.

மூன்ருவதாக ''எறும்புதின்னக்கண்ணு தெரியும்'' என்ற பழமொழியைப்பார்ப்போம். இதுபற்றிப் பொதுவாக வழங்கும் கருத்து நாம் எறும்பைத் தின்ருல் நமது கண்கள் நன்ருகத் தெரியும் என்று கருதுகிருர்கள் மோரில் எறும்பு கிடந்தால் அல்லது வேறுபானத்தில் சிற்றெறும்பு கிடந்தால் அவைகளைத் தனையையும் எடுத்துப்போடச் சோம்பல் கொண்டவராகி அப்பானத்தை வீணுக்கவும் மனமில்லாதவராகி உடனே எறும்பு தின்னக் கண்ணு தெரியும் என்று பழமொழியைக் கூறி அப்பானத்தைக் குடிக்கச் செய்து விடுகிருர்கள். என்னே இவர்கள் மதியீனம்! ஆனுல் இப்பழமொழியின் உண்மைப் பொருள். எறும்பிற்கு தானியம் நாம் போட அவை உண்டால் நமக்குக் கண்தெரியும் என்பதேயாகும். அவைகள் கண் தெரியாத உயிர்கள். மோப்பத்தால் உணவு இருக்குமிடமறிந்து சென்று உண்பவை. கண்தெரியாத காரணத்தால் கண்ட பானங்களில் நிறையப் போய் விழுந்துவிடுகின்றன. அத்தகைய எறும்பிற்கு உணவிட்டால் நமக்குக்கண் தெரியும் என்ற உண்மைப் பொருள் மாறிவிட்டது. வீட்டு முகப்பில் (வாசற்படியில்) பெண்களும் அரிசிமாவால் கோலமிட்டு எறும்பு தின்னும்படி உதவுகிருர்கள் என்ருல் எறும்பிற்கு ஆகாரம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தினை அடிப்படை

யாகக் கொண்டு இப்பழமொழி எழுந்தது எனத் தெரிகிறதல்லவா. இதன் உண்மை அறியாது கண்கள் தெரியும் எனக் கருதி எறும்பைத் தின்ன ஆரம்பித்து விடாதீர்கள்.

அடுத்தது ஒன்று கூறி முடித்துக்கொள்கிறேன். 'களவும் கத்தும் மற' என்ற நீதிமொழியைப் பார்ப்போம். இதனைச் சிலர் களவும் கற்றுமற எனக் கூறி திருட்டையும் கற்றுக் கொண்டு பின் மறந்து விடவேண்டும் எனப் பொருள் சொல்லி மனிதன் எல்லாக் கலையையும் அறிந்திருத்தல் வேண்டும், ஒன்றும் தெரியாது இருத்தல் கூடாது என்பதற்காகத்தான் களவும் கற்று மற எனக் கூறி உள்ளது என விளக்கம் வேறு விளம்புகிறார்கள். இவர்கள் புத்தி தாம் செய்யும் தீத்தொழிலுக்கு ஏற்பபொருள் பண்ணுகிறதே அன்றி உண்மையில் அது வல்ல பொருள். "களவும் கத்தும் மற"—திருட்டுத் தனத்தை பொய்யையும் மறந்துவிடு என்பதே நீதியும் அதற்குக்கண்ட பொருளுமாகும். ஆனால் அவர்கள் கத்தும் என்பதை கற்றும் எனத் திரித்து களவுத் தொழிலையும் கற்றுக்கொள் பின் மறந்துவிடு என்று சொல்லுகின்றனர். ஆகவே இம்மாதிரியாக தமிழர்தம் பண்பாட்டினை நாகரிகத்தை விளக்கும் அரிய பழமொழித் தொடர்களெல்லாம் மக்களின் அறியாமையால் திரித்து வழங்கப்பட்டு வருகின்றன. இனியாவது இம்மாதரி தவறாக வழங்குவதையும் தவறான பொருள் கூறுவதை விலக்கி நன்முறையில் வழங்குமாறு திருத்துங்கள் மாணவர்களே.

நடராஜன்,
6-ம் படிவம் 'ஆ' பிரிவு.

Physical Education.

The Annual Athletic Sports of the School was conducted on 20th February 1952.

List of Prize Winners.

SUPER SENIORS :	First.	Second.
1 100 Yds. Race	T. Ponnambalam	V. Padmanaban
2 400 Yds Race	G. Palanivelu	K. Ramadoss
3 Long Jump	V. Padmanaban	K. Ramadoss
4 Shot put	T. Kanthappan	K Ramadoss
SENIORS :		
1 100 Yds. Race	M. Narayanasamy	E. Shunmugam
2 200 Yds. Race	M. Balakrishnan	K. Vaithiyanathan
3 400 Yds. Race	M. Balakrishnan	E. Mustafa
4 Long Jump	K. Ramamurthi	E. Shunmugam
5 High Jump	E. Shunmugam	M. Narayanasami
6 Shot Put	K. Erusappan	P Kumaravelu
7 Pole Vault	M. Balakrishnan	K. Erusappan
JUNIORS :		
100 Yds. Race	N. Pushpalingam	V. Chellasamy
200 Yds. Race	S. Pitchaiappan	V. Chellasamy
Long Jump	N. Pushpalingam	S Krishnamurthi
High Jump	N. Pushpalingam	S Krishnamurthi
Crt. ball Throw	A. Chelladurai	S. Krishnamurthi
SUB-JUNIORS :		
100 Yds. Race	J. Rajasekaran	K. A. Thandapani
Wheel Borrow R.	A. Govindasamy & A. Ramalingam	C. Devanathan & K. Muniappan

Crt. ball Throw	K. Thandapani	K. Muniappan
Long Jump	V. Kaliamurthi	P. Narayanan
Obstacle Race	A. Bashiam	C. Devanathan
Cross Country R.	M. Balakrishnan	N. Pushpalingam
Relay Race	Tucker	Waller

5th CLASS SENIORS:

50 Yds. Race	P. Pakkirisamy	M. Ranganathan
50 Yds. Race Jr.	N. K. Mohamed Ali	S. Balasubramanian
Musical Chair	M. Ranganathan	P. Pakkirisamy

4th CLASS SENIORS:

50 Yds. Race	N. Kaliaperumal	Annamalai
50 Yds. Race Jr.	G. Sreenivasan	C. Sabapathi
Musical Chair	K. Arunachalam	T. Durairangam

CHAMPION ATHLETS:

Super Senior	K. Ramadoss & G. Palanivelu
Senior	M. Balakrishnan
Junior	N. Pushpalingam
Sub-Junior	K. A. Thandapani

List of Prize Winners for Girls.

SENIORS:

Candle Race	M. Padma	K. Vatchala
Sevenball Throws	M. Padma	V. Navaneetham
Lime & Spoon R.	M. Padma	V. Sarasvathy

JUNIORS:

25 Yds. Skipping	Amy Stellabai	M. I. Rokaiya
Bun Race	B. Neelayathatchi	K. Savitry

Skipping on the Spot (25 Sec.)

	Alice Kamala	V. Indrani

SUB-JUNIORS :

25 Yds. Skipping	J. Suseela	Mary Burnace
25 Yds. Race	K. Saroja	C. R. Vachala
Musical Chair	Mary Burnace	J. Suseela

Intramural Games Tournament :

Volley Ball	Mani House
Badminton	Tucker House
Chedu Kudu	Mani House
Teni Koit	Mani House
Foot Ball	Tucker House

D. EDDY GNANAMUTHU

GENERAL :

Peon's Race (200 Yds.)

A. Dhanapal Raju

Kinis Game for Staff.

Mr. K. Jayaraman Mr. C. Ramalingam

Old Boys 400 Yds. Race.

T. M. Ramalingam G. Muthukumarasamy

Badminton Match among the Staff.

Winners : M/S. A. Murugaian, T. Dhanaraj, S. Duraisamy, R. Kuppusamy, N. Thandapany.

Volley Ball Match. Old boys Versus Present boys.

Winners :—Old boys : M/S. S. Sankaralingam, S. Chinnaraj, G. Muthkumarasamy, P. Pachaiappan. A. Sadagopan, S. Velu.